Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | தை 14 | ஹிஜ்ரி 1426 | துல்ஹஜ் 26 | (27.01.2006) | வெள்ளிக்கிழமை | இதழ் 119

# புலிகளின் பகுதிக்குள் அத்துமீறி படையினர் பதுங்கித் தாக்குதல்!

## மட்டக்களப்பில் போராளி உயிரிழப்பு; மற்றொருவர் படுகாயம்!

மட்டக்களப்பு ——

மட்டக்களப்பு - பொலனறுவ மாவட்ட எல்லைப் புறத்திலுள்ள வடமுனையில், விடுதலைப் புலிப் போராளிகள் பயணம் செய்த உழவு இயந்திரம் மீது இராணுவப் புலனாய்வுத்துறையினரும், துணை ஆயுதக்குழுவினரும் இணைந்து நடத்திய பதுங்கித் தாக்குதலில் - மேஜர் கபிலன் என்ற போராளி வீரச்சாவடைந்ததாகவும், மற்றொரு போராளி படுகாயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் கடும் கண் டனம் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

வெலிக்கந்தையில் இருந்து 6.6 கிலோமீற்றர் தென்கிழக்குத் திசையாக அமைந்துள்ள வடமுனை என்ற இடத்திலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இராணுவ புலனாய்வுத்துறையினரும் (12-ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் சூட்டில் வயோதிபர் படுகாயம்!

## சாவகச்சேரியில் பெரும் பதற்றம்

தென்மராட்சி ——

சாவகச்சேரி நகரப்பகுதியில் நேற்றுக்காலை படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


நேற்றுக்காலை 9.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் - கொடிகாமம், அல்லாரை வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகராசா (வயது 71) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

சாவகச்சேரி நகரப் பகுதிக்கு தமது சொந்தத் தேவைக்காக சென்றுகொண்டிருந்தபோதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து நகர் பகுதியில் சிலமணி நேரம் பதற்றம் நிலவியது. நீண்ட நாட்களுக்குப் பின்னர் சாவகச்சேரி நகரப்பகுதியில் விற்பனை நிலையங் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் பேச்சு; அனான் வரவேற்பு!



# சமாதான முயற்சிகளை சில சக்திகள் சீர்குலைக்கும் அபாய நிலை உள்ளது!


## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



கொழும்பு ——

சமாதான முயற்சிகளை குழப்புவதற்கு சில சக்திகள் முயற்சிகளை

முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு முக்கியமானது பொறுமையாக இருத்தல் என்பதுதான்.




கொழும்பு —

இலங்கையில் [illegible]ண்டும் சமாதானப் பேச்சுக்கள் தொடங்கப்படுவதை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் வரவேற்றுள்ளார்.

நியூயோர்க்கில் கொபி அனானின் பேச்சாளர் ஸ்ரீபன் டுஜர்ரிக் வெளியிட்ட அறிக்கையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



கொழும்பு —

சமாதான முயற்சிகளை குழப்புவதற்கு சில சக்திகள் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய அபாயம் உள்ளதாகவும், இந்த வன்முறை சக்திகளை அனுமதிக்காமல் சமாதான முயற்சிகளை அவர்கள் தடம்புரளச் செய்யாதிருக்க இருதரப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த பின்னர் கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து சுவிற்சர்லாந்தில் பேச்சுக்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார் எரிக்சொல்ஹெய்ம்.

கொழும்பில் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அமைதிப்பேச்சுக்கள் மீண்டும் தொடங்கிவிட்டன. இருப்பினும், இந்த முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு முக்கியமானது பொறுமையாக இருத்தல் என்பதுதான்.

1998ஆம் ஆண்டு இந்த அமைதி முயற்சிகளை முழுநேரப் பணியாகத் தொடங்கும் போது 6மாத காலங்களில் முடிந்துவிடும் என்றுதான் கருதினேன். ஆனால் 8 ஆண்டு காலம் ஓடிவிட்டது.

இத்தகைய அமைதி முயற்சிகளில் பொறுமையாகச் செயற்படுதல் இன்றுவரை முக்கிமானதாக இருக்கிறது. இது சிலமாதங்களில் தீர்த்துவிடக்கூடிய பிரச்சினை அல்ல.

இரு தரப்பினருடனான சந்திப்பு மகிழ்ச்சியளிக்கிறது. அவர்கள் தலைவர்கள் என்பதால் மட்டுமல்ல யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவது தொடர்பாக சந்தித்துப்பேச ஒப்புக்கொண்டமைதான் மகிழ்ச்சியளிக்கிறது.

இந்தப்பயணம் கண்டிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது. அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரேஒரு படிநிலைதான் நகர்ந்திருக்கிறது. கடந்த சில மாதங்களினது (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனிவாவில் பேச்சு; சுவிஸ் முழுஆதரவு!

கொழும்பு —

போர் நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்துவது தொடர்பாக பேச்சுக்களை ஜெனீவாவில் நடத்துவதற்கு விடுதலைப்புலிளும் இலங்கை அரசும் எடுத்துள்ள முடிவை சுவிற்சர்லாந்து அரசு வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக சுவிற்சர்லாந்து அரசாங்கத்தின் சார்பில் பேர்னில்நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

புலிகளும் இலங்கை அரசும் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பான பேச்சுக்களை சுவிற்சர்லாந்தில் நடத்த இணக்கம் கண்டுள்ளனர். இந்த முடிவை சுவிற்சர்லாந்து வரவேற்கிறது.

இதன்மூலம் வன்முறைகள் அதிகரிப்பதை தடுக்கக்கூடியதாக இருக்கும் இந்தப்பேச்சுக்கள் நோர்வேயின் உதவியுடன் மேற்கொள்வதற்கான சகல உதவிகளையும் சுவிஸ் அரசு வழங்கும். அதேவேளை இந்தப்பேச்சுக்களின் மூலம் தீர்வுகளை எட்ட முடியும்.

கடந்த இரண்டு மாதங்களில் தீவிரமடைந்த வன்முறைகளால் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடைநிறுத்தப்பட்ட பேச்சுக்கள் மீளவும் தொடரப்படவுள்ளன. (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொன்ஸ்டபிள் விடுவிப்பு!



கிளிநொச்சி —

தமிழீழக் காவற்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பொலிஸாரில் ஒருவர் - நேற்று தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்பின்பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த செப்ரெம்பரில் மன்னார் -அடம்பனில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட மூன்று பொலிஸார் மீதான விசாரணைகள் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்களை அமெரிக்கா வரவேற்கிறது!

வொஷிங்டன் —

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதை வரவேற்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் பேச்சாளர் சென் மக்கொர்மக் வொஷிங் டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஜெனிவாவில் பெப்ரவரி மாதம் பேச்சு நடத்துவதற்கான இணக்கம் ஏற்பட்டுள்ளதை அமெரிக்க ஐக்கிய நாடுகள் வரவேற்கிறது.

அமைதி முயற்சிகளில் சாதகமான முன்னேற்றங்களை ஏற்படுத்தியிருக்கும் நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை நாம் பாராட்டுகிறோம். அமைதி முயற்சிகளில் நோர்வே மேற்கொள்ளும் அனுசரணைப் பணிகளுக்கு நாம் முழுமையாக ஆதரவளிக்கிறோம்.

அமெரிக்கப் பிரதிநிதி நிக்கலஸ் பேர்ண்ஸ் கடந்த 23 ஆம் திகதி இலங் கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்குத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் இல்லங்களுடனான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாண பகுதியிலுள்ள சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுடனான கலந்துரையாடல் நாளை மு.ப 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மேலதிக நீதிபதி எஸ். நந்தசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு யாழ்ப்பாண எல்லைக்குட்பட்ட சிறுவர் இல்லப்பொறுப்பாளர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமைமேம்பாட்டு அலுவலர்கள், சிறுவர் பாதுகாப்புக்குழு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொள்ளுமாறு யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் க.மீரா தெரிவித்தார். சிறுவர் இல்லங்களிலுள்ள குறைபாடுகள், முறைப்பாடுகள் தொடர்பாக இந்தக்கூட்டத்தில் கலந்துரையாடப் படவுள்ளன என தெரியவருகின்றது.

# விண்ணப்பம் கோரல்

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தின் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 2.I, தரம் 2.II சேர்ந்தவர்களிம் இருந்தும் இலங்கை ஆசரியர்சேவை வகுப்பு 1, வகுப்பு2.I, வகுப்பு 2.II (பட்டதாரியாக இருக்கவேண்டும்) சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தங்கள்விண்ணப்பங்களை அடுத்த மாதம் 13ம் திகதிக்கு முன் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.


## அழைப்பிதழ்

எமது தாயக மண்ணில் பிரத்தியேகப்படுத்தப்பட்ட
நூறு வீத செய்முறைப் பயிற்சியுடன் கூடிய கணனிக் கற்கை
நெறிகளைப் புகுத்தும் உயரிய நோக்கில் எமது நிறுவனம் புதிய

**விழிவெள்ளியாக**

வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதுடன்
எமது உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்துகொண்டு
வாழ்த்துக்களை வழங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

காலம்: 27.01.2006 (வெள்ளிக்கிழமை)
இடம்: 16/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(இந்துக் கல்லூரி அருகில்,
பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் எதிர் ஒழுங்கை.
OR வேளாங்கன்னி மாதா கோயில் எதிர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி.)

நிர்வாகத்தினர் மற்றும்
ஊழியர்கள்
UNIT

[C/5037]

**எமது தாயக மண்ணில் நூறுவீதம் செய்முறைப் பயிற்சியுடன் எமது மாணவர்களும் கணனித்துறையில் பாரிய விற்பனர்கள் ஆக வேண்டுமென்ற கனவை நினைவாக்கும் நோக்குடன் இந்த செய்முறைப் பயிற்சிக்கூடத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.**

**நாங்கள் யார்?**

- இந்தியாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுபவர்கள்.
- இந்திய பொறியியல் துறையில் எலக்ட்ரோனிக்ஸ் அன்ட் கொமுனிக்கேசன் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள்.
- 2 தசாப்த காலமாக இந்திய மற்றும் உலக முன்னணி நிறுவனங்களில் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான IBM, Compaq, Dell, Bell Labs, Dlink, Link sys, Microtek, Cisco மற்றும் Gateway போன்ற நிறுவனங்களுடன் இணை Hardware & Network பொருட்கள் தயாரிப்பில் பாரிய பங்காற்றியவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான Microsoft, Sun microsystems, Lotus Intl, AT& T Labs, SCO, Oracle மற்றும் Infosys நிறுவனங்களுடன் மென்பொருள் இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்கள்.
- கடந்த ஒரு வருடகாலமாக UNIT நிறுவனமூடாக கணனி உதிரிகள், வலைப் பின்னலமைப்பிற்கான உதிரிகள் மற்றும் அதற்குரிய சேவைகளையும் வழங்கிக் கொண்டிருப்பவர்கள்.
- கடந்த ஆண்டில் தாயக மண்ணிலுள்ள சில கணனிக்கல்லூரிகள் மூலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கியவர்கள்.

[C/5037]

## கணனிக் கல்வியில் எமது முதல் கல்

- ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது, செய்முறைப் பயிற்சி இல்லாமல் இன்றைய கணனிமய உலகில் எந்த ஒரு செயலாற்றலும் முடியாது என்பதை அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டு கூடுதலான செய்முறைப் பயிற்சி[illegible]ன் கூடிய ஆய்வுகள் செய்யக்கூடி[illegible] ஒரு பயிற்சிக் கூடமாக முதல் படியாக Hardware மற்றும் Network சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக எமது முதலாவது அய்வு கூடத்தை அமைத்து பிரத்தியேகமாக Hardware மற்றும் Network கணனிக் கற்கை நெறியினை ஆரம்பிக்கவுள்ளோம்.
- உலக அளவில் எந்தவொரு பயிற்சிகளை ஆரம்பிக்கும்போது அதற்குரிய பயிற்சிகளைப் பழகுவதற்கு தொழிற்கூடம் தான் முதலில் அமைப்பார்கள். அந்த வழியில் Hardware & Network சம்பந்தமான எமது தொழிற்கூடம் கடந்த ஒரு வருடகாலமாக சிறந்த பங்காற்றியது மட்டுமல்லாமல் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.
- விரிவுரைகள் யாவும் இந்திய பொறியியல் துறையில் சிறப்புப் பட்டம் (Electronics & Communication) பெற்று இரண்டு தசாப்த காலம் இந்திய கணனித்துறையில் அனுபவம் பெற்றவரும் இன்று தாயக மண்ணில் Hardware மற்றும் Network துறையில் முன்னணி விரிவுரையாளரால் செய்முறைப் பயிற்சியுடன் நடாத்தப்படும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாக செய்முறைப் பயிற்சிகள் செய்வதற்கு தனித்தனியாக செய்முறைப் பயிற்சிகள் செய்வதற்கு தனித்தனி நேர அலகு ஒதுக்கப்படுகிறது.
- மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளிலேயே ஒவ்வொரு மாணவர்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

**Our Field Offices:** UNIT, India. Aram Menporulagam, India. Zensoft, Malaysia. Zensoft, USA. WinCisco Labs, Canada.

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு
தொடர்பு
நிர்வாகம்
UNIT Education
16/1, Killnar Lane,
Jaffna.

Free Course Material

100% JOB ASSISTANCE

Inauguration Offer
இன்று Admission எடுப்பவர்களுக்கு
50%
பயிற்சிக்கட்டண கழிவு வழங்கப்படும்

Near Jaffna Hindu College,Opp Lane to PandiKottu Pillayar Kovil, K.K.S. Road. Opp Lane to Velankanni Church, Kasthuriyar Road, Jaffna.



**ராஜா யாழ்ப்பாணம்**




காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும்.
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**

அல்டிமேட் ஸ்ரார் அஜித்,
லைலா, விவேக்,
பிரகாஸ்ராஜ் நடித்த
**பரமசிவன்**
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரம் மாற்றப்பட்டுள்ளது.



காட்சிகள்;- 10.30, 2.30, (புதிய நேரம்)

**மனோகரா யாழ்ப்பாணம்**




தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

**நிரஞ்சனாஸ் சங்கானை**

கமல், அர்ஜுன், கௌதமி
மற்றும் பலர் நடித்த
**குருதிப் புனல்**
காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)



## சிறு விளம்பரம்


**பாடசாலை வான் சேவை**

கொக்குவில், கோண்டாவில், இணுவில், தாவடி ஆகிய இடங்களில் இருந்து யாழ்.நகர பாடசாலைகளுக்கு பாடசாலை சேவை (வான்) செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு : க.யோகநாதன், செம்பியன் சந்தி, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில். T.P. :- 077 6660572

C/5038


## மரண அறிவித்தல்



**திரு.விநாசித்தம்பி சோமசுந்தரம்**

(பிரபல தொழிலதிபர் கொட்டடி மரக்காலை, City Hardware, City Steels - Stanly Road, Jaffna, City Transport Service - Central Road Colombo - 12, பங்காளர் எஸ்.அருணாசலம் செட்டியார் அன்சன்ஸ் 165, 5 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு 11)

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 119, பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும், தற்போது கொழும்பு 26/5, லோறிஸ் வீதி, பம்பலப்பிட்டியில் வசித்தவருமாகிய பிரபல தொழிலதிபர் விநாசித்தம்பி சோமசுந்தரம் 25.01.2006 இல் காலமானார். அன்னார் சிறிதேவியின் (நாகம்மா) அன்புக் கணவரும், கேதீஸ்வரன், மனோகௌரி (கனடா), அமிர்தகௌரி (ஆசிரியை), ஜெயகௌரி(சங்கீத ஆசிரியை சைவப்பிரகாச வித்தியாலயம் வேலணை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், செல்வி, நீதிராஜா, சசி, சந்திரா, ரூபகாந்தன், யோகமோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜனி (கண்ணம்மா), தினேஷ், திருஷா, கருஷன், சஞ்சயன், ஆதித்தன், ஆரணியன், அருண், பிரவீணா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களாகிய சிவபாக்கியம், ஆறுமுகம், காராளபிள்ளை, பசுபதிப்பிள்ளை, சிவக்கொழுந்து சின்னத்தங்கம் மற்றும் நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா (ஆசிரியர்), சறோஜினி, இரத்தினம், இராசமணி, முத்தையா ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 29.01.2006 (ஞாயிற்றுக்கிழமை) அன்னாரது இல்லத்தில் முற்பகல் 8 மணிக்கு நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

No.26/5, Loures Road
Bambalapitya.
T.P - 2589701

(2174)


## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல வங்கி தனது காப்புறுதித் துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 2006ஆம் ஆண்டிற்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**பதவி 01: காப்புறுத் ஆலோசகர் – 2006 (Insurance Advisor)**
* ஜீ.சீ.ஈ.சாதாரண தரத்தில் 06 பாடங்களில் சித்தி (தமிழ், கணிதம் உட்பட)
* ஆங்கிலம் எழுத வாசிக்க தெரிந்திருக்க வேண்டும்.
* வேறு காப்புறுதி நிறுவனத்தில் பணிபுரிந்த அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
* பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**பதவி 02: விற்பனை அபிவிருத்த் அலுவலர் – 2006**
* ஜீ.சீ.ஈ.சாதா.தரத்தில் 06 பாடங்கள் சித்தி (தமிழ், கணிதம் உட்பட)
* வேறுகாப்புறுதி நிறுவனத்தில் ஆகக்குறைந்தது ஒருவருடம் பணிபுரிந்த அனுபவம்
* ஜீ.சீ.ஈ. விசேடதரத்தில் 03 பாடங்கள் சித்தி
* பட்டதாரிகளுக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி: 05.02.2006


பதவி தொடர்பான விபரத்தை கடித உறையின் மேற்பகுதியில் குறிப்பிடவும்.

விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்: விளம்பர இல- 46
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(2173)

# புலிகளுடன் நேரடிப் பேச்சு ஏன் நடத்தமுடியவில்லை?

## மகிந்தவிடம் ரணில் கேள்வி



கொழும்பு

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கத்தால் இதுவரை ஏன் நேரடிப் பேச்சுக்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது என்று - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளதாவது:-

தங்களின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக யுத்த முழக்கங்களை எழுப்புபவர்களுக்கு மீண்டும் இடமளிப்பதா?

இல்லையேல், சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் யுத்தத்தை நிறுத்தி சமாதானச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுத்து நாட்டை ஐக்கியப்படுத்துவதா என்பது பற்றித் தீர்மானிக்கவேண்டிய காலம் தற்போது மலர்ந்துள்ளது.

இந்த முழக்கங்களை எழுப்புபவர்கள் மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் இராணுவத்தில் இணைந்து தங்களின் உயிரை தியாகம் செய்வதற்குத் தயாராக இல்லை.

தாய் நாட்டுக்காகப் போராட முன்வருமாறு அப்பாவித் தாய்தந்தையரின் பிள்ளைகளுக்கு அழைப்பு விடுத்து அவர்களின் உயிரை பலி கொடுக்கவே முயற்சிக்கின்றனர்.

பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகள் ஈடுபடத் தயாராக உள்ள போதிலும், அந்த அமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு இதுவரை இந்த அரசாங்கத்தால் முடியாதுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருந்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த அனைத்துக் கட்சிகளுக்கும் அந்தக்கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டின்போது சமாதானப்பேச்சு வார்த்தைகளை உடனடியாகத் தொடங்கவேண்டும் என்று அனைத்துக் கட்சிகளாலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினைக்கு வெளிநாட்டு அனுசரணையின்றி தீர்வு காணப்படவேண்டும் என்ற வாதம் வலுவிழந்து போயுள்ளது என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் கருத்து நகைப்புக்குரியதாம்!

கொழும்பு

இராணுவத்துக்கு எதிராக குண்டுத் தாக்குதல்களை நடத்துவது ஆயுதப் பயிற்சி பெற்ற சாதாரண மக்களே என புலிகள் அமைப்பு தெரிவிக்கும் கருத்து நகைப்புக்குரிய விடயம் என இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

ஏனெனில், இராணுவப் பயிற்சி பெற்ற பொதுமக்களினாலும், இவ்வாறு திட்டமிட்டு இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல் எதனையும் நடத்த முடியாது. ஆகவே, தற்போது இராணுவத்தின்மீது மேற்கொள்ளப்பட்டுவரும் குண்டுத் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகளே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# விஞ்ஞான பாட பெறுபேறுகள் இணையத்தளத்தில் வெளியாகின

கொழும்பு

கல்விப் பொதுத்தராதர உயர் தர விஞ்ஞான பாடப் பெறுபேறுகள் நேற்று பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சையின் விஞ்ஞான பாட பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கடந்த 24 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது.

புதிய பெறுபேறுகளுக்கு அமைய மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்படுவர் எனவும், தற்போது பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த தெரி வித்தார்.

இதற்கமைய www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பெறுபேறுகளைப் பார்வையிட முடியுமெனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிய அசோக் லேடன் பேருந்துகள்

கொழும்பு

இந்திய அரசாங்கத்தின் கடன் திட்டத்தின்கீழ் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கு புதிய அசோக் லேடன் பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச மட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையைக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளாக தற்போது இறக்குமதி செய்யப்பட்டு துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பேருந்துக்கள் அனைத்தும் கொழும்பு டிப்போவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

டிப்போவில் இடம் போதாததால் கொழும்பு காலி வீதியில் இந்த புதிய போக்குவரத்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் - வெகுவிரைவில் பிரதேச போக்குவரத்து சபைக்கு அனுப்பிவைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் போக்குவரத்து சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# மனித உரிமை மீறல் குறித்து சொல்ஹெய்ம் ஆலோசனை!

கிளிநொச்சி

வடக்கு- கிழக்கு மனித உரிமைச் செயலகமான நிசோர் அமைப்பினருடனும், யாழ் மற்றும் முல்லைத்தீவு கிறிஸ்தவ மத குருமார்களுடனும் எரிக் சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தினார்.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகளின் நிலைமைகள் மோசமடைந்து வருவது குறித்து எரிக் சொல்ஹெய்முக்கு நிசோர் பிரதிநிதிகள் விளக்கியதாக - நிசோர் செயலாளர் டொக்டர் மாலதி தெரிவித்தார்.



இந்தச் சந்திப்பில் நிசோர் அமைப்பின் இயக்குனர் கருணாரட்ணம் அடிகளார், நிசோர் செயலாளர் டொக்டர் மாலதி மற்றும் கிறிஸ்தவமத குருமார்கள் ஏ.ஜ.பேர்னார்ட், ஜேம்ஸ் பத்திநாதர், எம்.ரவிச்சந்திரன் எம். ரெக்ஸ்சவா, எஸ்.ஜுட் நிக்சன் ஏ. பி. திரமகன் ஆனந்தகுமார் மற்றும் மதி இளம்பருதி ஆகியோர் பங்கேற்றனர்.

எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே குழுவில் இலங்கை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர், நோர்வே வெளிவிவகார அமைச்சின் பிரதி இயக்குநர் ஒட் நஸ்ட்டல், நோர்வே வெளிவிவகார அமைச்சக அதிகாரி சொன்ட்ரெப் ஜொட்வெட், நோர்வே தூதரகச் செயலாளர் டொம் க்னப்ஸ்கொக் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

# வாக்களிப்பு நிலையங்களில் வைத்தே உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள்!

கொழும்பு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது வாக்களிப்பு நிலையத்தில் இருந்தே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகளை வெளியிட தேர்தல் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

வாக்களிப்பு நிலையத்தில் இருந்தே முடிவுகளை வெளியிடுவதன் மூலம் தேர்தலுக்கான செலவைக் குறைக்க முடியும் எனவும், மிகவும் விரைவாக தேர்தல் முடிவுகளை வெளியிட முடியும் எனவும் தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

மேற்படி செயற்பாட்டால் தற்போது சிக்கலாகவுள்ள தேர்தல், மத்தியநிலைய பாதுகாப்பு அதிகாரிகளின் பயண வசதிகள் போன்ற சிக்கல்களை தீர்த்துக்கொள்ளக்கூடிய விதம் பற்றிய விசேட அவதானம் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்தே முடிவுகளை வெளியிடுவது 1979, 1983 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் -

இந்தமுறை 12 ஆயிரம் வாக்கெடுப்பு மத்திய நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அனுமதி மறுக்கப்பட்டோரின் ஆவணங்கள் மேல்முறையீட்டு ஆணையாளரிடம்!

கொழும்பு

பாடசாலைகளில் முதலாம் வகுப்பு அனுமதியின்போது நிராகரிக்கப்பட்ட அனைத்து பிள்ளைகளினது ஆவணங்கள் மேன்முறையிட்டு ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களுக்குரிய பாட சாலையை தெரிவுசெய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் ஊடக செயலாளர் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் முடிவடைவதற்கு முன்னர் இந்த நடவடிக்கை பூர்த்தியடையும் என்றும் தெரிவித்தார். இதே வேளை இலங்கையில் உள்ள சகல மத்திய வித்தியாலயங்களையும் கன்னங்கர செயற்திட்டத்திற்கமைய அபிவிருத்தி செய்ய கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருவதாக கல்வி அமைச்சின் ஊடக செயலாளர் தெரிவித்தார்.

இதற்கமைய இலங்கையில் உள்ள 54 மத்திய மகா வித்தியாலயங்களில் 40 பாடசாலைகள் சகல வசதிகளை கொண்ட பாடசாலையாக அபிவிருத்தி செய்யப் படவுள்ளன.

# 3 ஆண்டுகள் சேவையாற்றிய தொண்டராசிரியருக்கு நியமனம்

திருகோணலை

வடக்கு-கிழக்கு பாடசாலைகளில் கடந்த மூன்று ஆண்டுகளாக கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவிருப்பதாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு பாடசாலைகளில் கடந்த மூன்று ஆண்டுகளாக தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி ஆசிரியத் தகுதி பெற்ற 314 பேருக்கு எதிர்வரும் 12ஆம் திகதி நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் 54 தொண்டர் ஆசிரியர்களுக்கும், வவுனியா மாவட்டத்தில் 7 பேருக்கும், அம்பாறை மாவட்டத்தில் 253 பேருக்கும் நிரந்தர ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

# குண்டுவெடிப்பு; விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு

தலைநகர் கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்த 5 குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மூவர் இந்த விசாரணையை மேற்கொள்வர் என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தக் குண்டு வெடிப்புகள் ஒரே குழுவினால் நடத்தப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கொழும்பு குண்டு வெடிப்புகளையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பில் வெடித்த குண்டுகளைப் பகுப்பாய்வு செய்த ஆய்வாளர் குணதிலக்க 75 கிராம் உயர் வெடி பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# 25 ஆயிரம் அரச ஊழியருக்கு வீடுகள்

கொழும்பு

வீடுகள் இல்லாத அரச ஊழியர்கள் 25 ஆயிரம் பேருக்கு புதிய வீடுகளை வழங்க அரச பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

தனது அமைச்சில் பத்திரிகையாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது கண்டி, குண்டசாலை, பியகம, குருநாகல, அவிசாவளை ஆகிய பிரதேசத்தில் முதற்கட்டமாக வீடுகளை அமைப்பதற்கு தாம் தீர்மானித்துள்ளதாகவும், இந்த வீடுகள் அரச ஊழியர்களுக்கு சேவைமூப்பின் அடிப்படையில் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தனித்தரப்பு கோரிக்கை நிராகரிப்பு: முஸ்லிம் சபை கவலை தெரிவிப்பு!

கொழும்பு

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான பேச்சுகளில் முஸ்லிம்களை தனித்தரப்பாக இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளமை கவலை அளிப்பதாக முஸ்லிம் சபை கவலை தெரிவித்துள்ளது.

இது குறித்து 58 முஸ்லிம் அமைப்புக்களின் கூட்டமைப்பான முஸ்லிம் சபை மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் -

முஸ்லிம்களை தனித்தரப்பாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நீங்கள் நிராகரித்திருப்பது எமக்குக் கவலையளிக்கிறது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது முதலே இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுவருகிறது.

அமைதி முயற்சிகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக இணைக்கப்படாவிட்டால் முஸ்லிம்களினது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு அமைதி நடவடிக்கைகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுவிடும் நிலை உள்ளது.

இருந்தபோதும் அமைதி முயற்சிகள் வெற்றிபெற நாங்கள் பிரார்த்திக்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைவஸ்து பாவனை கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு


இலங்கையில் புகையிலை மற்றும் போதைவஸ்துக்களின் பாவனையைக் குறைப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று- இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.


இந்த விவகாரத்தை கையாள்வதற்கு விசேட அ[illegible]ர சபையை நிறுவுவதற்கு அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கவுள்ளனர்.

புகையிலை மற்றும் போதைவஸ்துக்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் - மருத்துவ துறைகள் மட்டுப்படுத்தகூடாது, பொருளாதார, அரசியல் துறைகளுக்கும் இந்த கடமை விஸ்தரிக்கபட வேண்டும் என்று இந்த சங்கம் கூறியுள்ளது.


## வி.பி.முக்கோணத் தொடர் 7 ஆவது போட்டியில்

# 5 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியா இலங்கை அணியை தோற்கடித்தது!









அடலெய்ட் —

வி.பி. கிண்ணத்துக்கான முக்கோண ஒருநாள் போட்டித் தொடரின் ஏழாவது போட்டியில் நேற்று ஐந்து விக்கெட்டுக்களால் இலங்கை அணியை அவுஸ்ரேலியா தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முபாராக் - தரங்க ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். முபாரக் சிக்ஸர்கள், பவுண்டரிகளாக அடித்து ஆடிக்கொண்டிருந்த அதேவேளை - தரங்க தடுத்தாடிக்கொண்டிருந்தார்.

ஸ்கோர் 53 ஆக இருந்தபோது 47 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த முபாரக், சைமண்ஸ் வீசிய பந்தில் லீயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சங்கக்கார களமிறங்கினார். ஸ்கோர் 97 வரை உயர்ந்த போது 2 ஆவது விக்கெட்டாக தரங்க வீழ்த்தப்பட்டார். மக்ராவின் பந்தில் மார்ட்டினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர், 66 பந்துகளில் 2 பவுண் டரிகளுடன் 31 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து, ஜயவர்த்தன களமிறங்கினார். ஆனால், ஸ்கோர் 100 ஐ எட்டியபோது ஹோக்கின் பந்தில் போல்ட்டான சங்கக்கார, 37 பந்துகளில் ஒரு பவுண்டரி, 1 சிக்ஸருடன் 25 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து, அத்தப்பத்து களமிறங்கினார். ஸ்கோர் 155 ஐ தொட்டபோது 4 ஆவது விக்கெட்டாக அவர் வீழ்த்தப்பட்டார். இவர் பிறக்கனின் பந்தில் மார்ட்டினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர் 48 பந்துகளில் ஒரு பவுண்டரி அடங்கலாக 32 ஓட்டங் களைப் பெற்றார்.

இதன்பின்னர் ஸ்கோர் 161 ஆக இருந்தபோது ஜயவர்த்தனவும் பிறக்கன் வீசிய பந்தில் சைமண்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 36 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற் றார்.

அடுத்து, ஸ்கோர் 167 ஆக இருந்த போது ஒரு ஓட்டத்துடன் ஹோக்கின் பந்தில் டில்சான் போல்டானார்.

அடுத்து, ஆர்னோல்ட் - வாஸ் ஜோடி இணைந்து ஸ்கோரை 196 வரை உயர்த்தியது. 7 ஆவது விக்கெட்டாக வாஸ் வீழ்த்தப்பட்டார். இவர் சைமன்ஸின் பந்தில் 15 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹோக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஆர்னோல்டுடன் இணைந்த கணேகம 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சைமன்ஸின் பந்தில் போல்டானார்.

50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 8 விக்கெட் இழப்புக்கு 218 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சைமன்ஸ் 3, பிறக்கன் மற்றும் ஹோக் ஆகியோர் தலா 2, மக்ரா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

அடுத்து இலகுவான வெற்றி இலக்குடன் களமிறங்கியது அவுஸ்ரேலிய அணி.

கில்கிறிஸ்ட் வந்தவேகத்தில் விளாசத் தொடங்கினார். அவருடன் இணைந்த கடிச்சும் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.

ஸ்கோர் 47 ஆக இருந்த போது 33 பந்துகளில் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 34 ஓட்டங்களை எடுத்திருந்த கில்கிறிஸ்ட் குலசேகரவின் பந்தில் கனேகமவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து, ஹொட்ஜ் களமிறங்கினார். ஆனால், ஸ்கோர் 73 ஐ எட்டியபோது குலசேகர இவரை 5 ஓட்டங்களுடன் போல்ட் ஆக்கி பவிலியனுக்கு அனுப்பிவைத்தார்.

அடுத்து, கடிச்சுடன் மார்ட்டின் இணைந்தார் ஸ்கோர் 115 எட்டும் வரை இவர்கள் தாக்குப்பிடித்தனர். இந்த நிலையில், 89 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 52 ஓட்டங்களை எடுத்திருந்நத கடிச், டில்சானின் பந்தில் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சைமன்ஸ் களமிறங்கினார். ஸ்கோர் 175 தொட்டபோது இவர் முரளிதரனின் பந்தில் தரங்கவிடம் பிடிகொடுத்து பவிலியன் திரும்ப நேரிட்டது.

சைமன்ஸ் 33 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து, கிளார்க் களமிறங்க, ஸ்கோர் 177 ஆக இருந்தபோது முரளிதரனின் பந்தில் மார்ட்டின் போல்ட் ஆனார். இவர் 72 பந்துகளில் 1 பவுண்டரியுடன் 46 ஓட்டங்களை எடுத்தார்.

இறுதியாக கிளார்க்குடன் ஜோடி சேர்ந்த ஹூசே, அவுஸ்ரேலிய அணியை வெற்றி இலக்குக் கொண்டு சென்றார்.


48.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து அவுஸ்ரேலிய அணி 219 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கிளார்க் 16 ஓட்டங்களுடனும் ஹூசே 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் குலசேகர 2, முரளிதரன் 2, டில்சான் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக சைமன்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

## நடுவரின் முடிவை எதிர்த்த கில்கிறிஸ்டுக்கு அபராதம்





சிட்னி —

போட்டி நடுவரின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்த அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் கில்கிறிஸ்ட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியா - தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் இடையிலான முக்கோண கிரிக்கெட் போட்டி அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் 2 ஆவது ஆட்டம் கடந்த 15ஆம் திகதி பிரிஸ்பேனில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் உலக சம்பியனான அவுஸ்ரேலியாவை 5 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க வென்றது.

இந்த ஆட்டத்தின் போது ஐ.சி.சி விதிமுறைக்கு மாறாக செயற்பட்டதாகக் கூறி அவுஸ்ரேலிய அணியின் அதிரடி ஆட்டக்காரரும், விக்கெட் காப்பாளருமான கில்கிறிஸ்ட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதாவது அந்த ஆட்டத்தின் போது போட்டி நடுவர் கொடுத்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கில்கிறிஸ்ட் பேசினார்.

தகாத வார்த்தைகளால் பேசிய கில்கிறிஸ்ட் அதற்கு மன்னிப்பும் கேட்டார். எனினும் கில்கிறிஸ்ட் மீது ஐ.சி.சியிடம், போட்டி நடுவர்கள் புகார் செய்தனர். புகாரின் படி ஐ.சி.சி விதிமுறைகளுக்கு மாறாக செயற் பட்ட கில்கிறிஸ்ட்டுக்கு, அந்தப் போட்டியில் அவர் பெறும் சம்பளத்தில் 40 சதவீதத்தை அபராதமாக செலுத்த ஐ.சி.சி உத்தரவிட்டுள்ளது.

## கராச்சி டெஸ்ட்டுக்கான பாகிஸ்தான் அணி

பைசலாபாத் —

இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையேயான 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாளைமறுதினம் கராச்சியில் தொடங்கவுள்ளது.

இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. முதுகுவலியால் அவதிப்பட்டு வரும் இன்சமாம் இந்தப்போட்டியில் ஆடமாட்டார் என்று கூறப்பட்டது. எனினும் அவரது காயம் குணமடையாத நிலையிலும் பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றுள்ளார். 36 வயதான இன்சமாம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 25 சதங்கள் அடித்துள்ளார். சொகைப் மலிக்கின் தந்தை இறந்து விட்டதைத் தொடர்ந்து ,அவர் மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இடம்பெறவில்லை. மேலும் அசிம் கமாலின் தந்தையும் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதால் அவரும் அணியில் இடம் பெறவில்லை. அவர்களுக்குப் பதிலாக உமர் குல், பைசல் இக்பால் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அணி விபரம்: இன்ஸமாம் (கப் டன்), யுனுஸ்கான் (துணைக் கப் டன்), சல்மான்ட், இம்ரான் பர்கத், முகம்மது யூசுப், பைசல் இக்பால், அப்ரிடி, கம்ரன் அக்மல், அப்துல் ரசாக், அக்தர், முகம்மட்சமி, ரானா, முகம்மது ஆசிப், உமர் குல், கனே ரியா, அர்ஷத்கான்.

## போட்டிகள் சமநிலையில் முடிந்தமைக்கு மோசமான ஆடுகளங்களே காரணம்



பைசலாபாத் —

பைசலாபாத் டெஸ்ட் சமநிலையில் முடிந்ததற்கு மோசமான ஆடுகளமே காரணம் என இந்திய அணித் தலைவர் ராகுல் ராவிட் தெரிவித்தார்.

லாகூர், பைசலாபாத்தில் பிளாட் ஆடுகளம் அமைக்கப்பட்டது. இந்த ஆடுகளம் எந்த வகையிலும் பந்து வீச்சாளர்களுக்கு பயன் தராது. கராச்சியில் நடைபெறும் 3 ஆவது டெஸ்டிலும் இதே மாதிரியான ஆடுகளம் அமைக்கப்பட்டால், சமநிலையில்தான் முடியும். இதனால் டெஸ்ட் தொடர் 0 - 0 என்ற கணக்கில் தான் முடியுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இதனால் கராச்சி டெஸ்டில் ஸ்போர்ட்டிங் ஆடுகளம் சரியாக அமைக்கப்படவேண்டும்.

கடந்த முறை இங்கு வந்தபோது ஆடுகளம் நன்றாக அமைக்கப்பட்டிருந்தது. நாங்கள் சிறப்பாக விளையாடி, டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றினோம். இதேபோல பாகிஸ்தான் அணி இந்தியா வந்தபோது டெஸ்டில் முடிவு ஏற்பட்டது. தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிநதது.

பைசலாபாத் டெஸ்டில் 5 பந்து வீச்சாளர்களை களம் இறக்கிய முடிவு சரியானதுதான். ஏனென்றால் டோனி - பதான் சிறப்பாக ஆடி சிறந்த இணைப்பாட்டத்தைக் கொடுத்தனர். சகலதுறை ஆட்டக்காரர்கள் வரிசையில் பதான் உள்ளார்.

விளையாட்டு

இது மாதிரியான ஆடுகளத்தில் 20 விக்கெட்டுக்களை கைப்பற்றுவது மிகவும் கடினம்.

போட்டியில் முதல் 2 நாட்களில் இரு அணி வீரர்களிடையே சொற்போர்கள் இருந்தது. இதை ஐ.சி.சி. நடுவரான ரஞ்சன் மடுகல்ல, மைதான நடுவர்கள் ரூடி கோயட்சன், சைமன் ரபெல் ஆகியோர் கட்டுப்படுத்தினர். இதனால் எந்த சர்ச்சையும் ஏற்படவில்லை.

பதான் விக்கெட் எடுக்காமல் இருந்தாலும் அவரது பந்துவீச்சு திருப்தியாக இருந்தது. ஏனென்றால் இந்த ஆடுகளத்தில் விக்கெட் கைப்பற்றுவது முக்கியமான ஒன்றாகுமென ராவிட் கூறினார்.

## 3 வது டெஸ்டில் சேர்க்காவிடின் கங்கூலி நாடு திரும்பவுள்ளார்!

பைசலாபாத் —

பாகிஸ்தான் அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் சேர்த்துக் கொள்ளப்படாவிட்டால் - கங்கூலி நாடு திரும்ப வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்கூலி பல்வேறு சர்ச்சைகளுக்கிடையே பாகிஸ்தான் தொடருக்கான டெஸ்ட் அணியில் இடம் பெற்றார்.

பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் இடம்பெற்ற அவருக்கு டெஸ்ட் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் 11 பேர் கொண்ட அணியில் வாய்ப்புக் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருந்தது.

லாகூர் டெஸ்டில் கங்கூலியை தொடக்க வீரராக களமிறங்குமாறு கப்டன் ராவிட் கேட்டுக் கொண்டார். ஆனால், ராவிட்டின் சொல்லை அவர் கேட்கவில்லை. நடுத்தர வரிசையில் தான் ஆடுவேன் என பிடிவாதமாக இருந்தார்.

ஆனாலும் கங்கூலி தனது தவறை போட்டி ஆரம்பித்த பின்னர்தான் புரிந்து கொண்டார். ஏனென்றால் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்குச் சாதகமாக இருந் தது. தொடக்க ஆட்டக்காரராக இறங்கிய ராவிட் சதமும், சேவாக் இரட்டைச்சதமும் அடித்தனர்.

பைசலாபாத்தில் நடந்த இரண்டாவது டெஸ்டில் கங்கூலி 11 பேர் கொண்ட அணியிலிருந்து நீக்கப்பட்டார். முதல் டெஸ்டில் தொடக்க வீரராக ஆட மறுத்ததால் தான் நீக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. துடுப்பாட்ட வாய்ப்பு கொடுக்கப்படாமலே அவர் கழற்றி விடப்பட்டதால் மீண்டும் சர்ச்சை உருவானது.

இந்த நிலையில், நாளை மறுதினம் ஆரம்பமாகும் 3 ஆவது டெஸ்டிலும் 11 பேர் கொண்ட அணியில் இடம் கிடைக்காவிட்டால், கங்கூலி நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

2 ஆவது டெஸ்டில் 5 பந்து வீச்சாளர்களைச் சேர்த்தது சரிதான் என்று கூறியதன் மூலம் கங்கூலி நீக்கத்தை ராவிட் நியாயப்படுத்தியுள்ளார். பயிற்சியாளர் சப்பலும், ராவிட்டும் 3 ஆவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் மாற்றம் செய்வதில்லை என முடிவு செய்துள்ளனர். இதனால் கங்கூலி 3 ஆவது டெஸ்டில் இடம்பெறும் வாய்ப்பு அரிதாகவே உள்ளது.

பாகிஸ்தான் சென்றுள்ள கங்கூலி இதுவரை ஒரு பந்தைக்கூட சந்தித்து துடுப்பெடுத்தாடவில்லை. ரஞ்சிப் போட்டியில் விளையாடி விட்டு தாமதமாகச் சென்றதால், லாகூரில் நடந்த 3 நாள் பயிற்சி ஆட்டத் திலும் விளையாடவில்லை. முதல் டெஸ்டில் மழை காரணமாகவும் துடுப்பெடுத்தாடவில்லை.

# படையினர் பறித்த அடையாள அட்டை ஒப்படைக்கவில்லையென முறைப்பாடு!

யாழ்ப்பாணம் —

கடந்த டிசம்பர் மாதம் படையினரால் பறிக்கப்பட்ட விசேட அடையாள அட்டை ஒரு மாதகாலமாகியும் மீள ஒப்படைக்கப்படவில்லை எனத் தெரிவித்து யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி சங்கானையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது யாழ். ஐந்துசந்திப் பகுதியில் உள்ள இராணுவ காவலரணில் கடமையாற்றுகின்ற படையினரால் பறிக்கப்பட்ட விசேட அடையாள அட்டை திருப்பி வழங்கப்படாதிருப்பதாகவும் - இதனால் வீட்டிலிருந்து வேறு இடங்களுக்குத் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும் -

சங்கானையைச் சேர்ந்த இராசலிங்கம் அருள்தாஸ் என்பவர் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது தந்தையார் கைகள் இரண்டையும் இழந்தவர் என்றும் தனது குடும்பம் 8 அங்கத்தவர்களைக் கொண்ட பெரிய குடும்பமாக இருப்பதனால் தான் கூலிவேலை செய்து இவ்வளவு காலமும் சீவியத்தை பார்த்து வந்ததாகவும் -

தற்போது படையினரால் விசேட அடையாள அட்டை பறிக்கப்பட்டதால் வீட்டுக்கு வெளியில் சென்று தொழில் செய்யமுடியாத நிலை தோன்றியிருப்பதால், பொருளாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் தெரிவித்தார்.

# மனோகரா சந்தியருகே வீட்டில் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம் —

யாழ்.மனோகராச் சந்தியிலுள்ள வீடு ஒன்றினுள் நேற்றுமுன்தினம் 25 பவுண் நகைகள் திருடப்பட்டன.

மனோகராச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் இரவு ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அலுமாரியில் இருந்த 25 பவுண் பெறுமதியான சங்கிலி, காப்பு, கல்லட்டியல் போன்றவற்றைத் திருடிச்சென்றனர்

வீட்டினுள் இருந்தவர்களுக்கு மயக்கமருந்து தெளிக்கப்பட்டு மேற்படி கொள்ளைச் சம்பவம் நடைபெற்றிருப்பதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீட்டுக்கு முன்பாகவுள்ள வீதியில் இராணுவத்தினர் இரவுவேளை தமது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வெட்டுக்காயங்களுடன் இளைஞர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதி

பருத்தித்துறை —

தும்பளைதெற்கில் இளைஞர் ஒருவர் கடுமையான வெட்டுக் காயங்களுக்குள்ளான நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தும்பளை தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றது. சம்பவத்தில் யோகநாதன் ஜெயராஜ் (வயது 21) என்பவரே பலத்த வெட்டுக் காயத்துக்கு இலக்கானவராவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மேற்படி நபர் அவரது வீட்டுக்கு அருகில் பலத்த வெட்டுக்காயத்துக்குள்ளான நிலையில் கிடப்பதை கண்ட அயலவர்கள், நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் மந்திகை வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

தற்போது அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். இரண்டு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே மேற்படி சம்பவம் நிகழ்ந்ததாக தெரியவருகிறது.

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் சுயதொழில் முயற்சிக்கு உதவுதொகை

சுதுமலை —

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் வடமராட்சிப் பகுதியில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான உதவுதொகை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

37 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா உதவுதொகை வழங்கப்பட்டுள்ளது. கற்கோவளம், தும்பளை கிழக்கு, நாகர்கோயில் கிழக்கு, மேற்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கே மேற்படி உதவித் தொகைகள் வழங்கப்பட்டது.

சுயதொழில் முயற்சிக்கென உதவு தொகை வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பெண்கள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் தென்மராட்சியில் ஐந்து கிராமங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான பணக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

சரசாலை, குமரநகர், கரம்பைக்குறிச்சி, கைதடி, நாவற்குழி தெற்கு, மேற்கு ஆகிய கிராமங்களின் மாதர் சங்கங்களின் ஊடாக சிறுகைத் தொழில்களுக்கான கொடுப்பனவுகள் குழுக்கள் ரீதியாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வறுமைக் கோட்டிற்குட்பட்ட கணவனை இழந்த, போரால் பாதிக்கப்பட்ட மக்களின் சுயதொழிலை விருத்தி செய்வதற்காகவே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதாகவும்-இதன்மூலம் பப்படம் தயாரித்தல், கயிறு திரித்தல், கிடுகு பின்னல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (91)

# நெசவு நிலைய புனரமைப்புக்கு நிதியுதவுமாறு கோரிக்கை!

ஆனைக்கோட்டை —

ஆனைக்கோட்டை - உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பராமரிப்பில் பல வருடங்களாக இருந்து வரும் நெசவு நிலையக் கட்டடம் மிக நீண்ட காலமாக நெசவுப் பயிற்சியின்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

70 அடி நீளமும், 30 அடி அகலமும் கொண்ட இந்தக் கட்டடம் எவ்வித அபிவிருத்தியுமின்றிக் காணப்படுவதைச் சுட்டிக்காட்டி - இந்தக் கட்டடத்தைப் புனரமைத்து கலாசார மண்டபமாக மாற்றியமைக்க நிதி உதவி வழங்குமாறு உயரப்புலம் பாரதி சனசமுக நிலையத் தலைவர் ஆ.சி.கணேசவேல் - யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (101)

# ஞானச்சுடர் வெளியீடு

தொண்டமானாறு —

செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் பிரதி மாதம் தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் தைமாத இதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த இதழுக்கான வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வன் ஆறு. திருமுருகனும், மதிப்புரையை ஆ. சிவநாதனும் நிகழ்த்துவார்கள்.

# யாழ்.பொது நூலகத்துக்கு தமிழகத்திலிருந்து நூல்கள்

யாழ்பாணம் —

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு தமிழக நிறுவனங்களிடமிருந்து 31 ஆயிரம் நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் உ.வே.சுவாமிநாதஐயர் நூலகம், அரச தொல்லியல் துறை அடையாறு நூலகம் மற்றும் ஆய்வு மையம், பாண்டிச்சேரி பிரெஞ்சு நிலையம், தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் மற்றும் சரஸ்வதி மகால் நூலகங்களிலிருந்து இந்த நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவு முகாமை நிறுவனம் மூலமாக 5 மில்லியன் ரூபா மதிப்பிலான நூல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தேசக்கட்டமைப்புதுறை அமைச்சு செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க தெரிவித்தார்.

இந்த நூல்களை யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.



புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி பவளவிழாச் சபையால் நடத்தப்பட்ட பவளவிழாப் பிரகடன நிகழ்வின்போது - சிறப்பு நிகழ்வாக இடம்பெற்ற யாழ். பிரபல புத்தகாலய நிறுவனத்தினரின் புத்தகக் கண்காட்சியை கல்லூரியின் முன்னாள் அதிபர் க.கனகராசா நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், அருகில் கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# பொதுக் கட்டடங்களை அமைப்பதற்கு ஏற்பாடு

உடுவில் —

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சமூக அபிவிருத்தி மையத்தால் பொதுத் தேவைக்கான கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் 10 இடங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவிருப்பதாகவும் - வலி.வடக்கு பிரதேசத்தில் இந்தத் திட்டதுக்கென அளவெட்டி மத்தியில் இடம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் வலி.வடக்கு பிரதேச செயலர் தெரிவித்தார். (101)

# நடேஸ்வரா கல்லூரிக்கு புதிய வகுப்பறைத் தொகுதி

உடுவில் —

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சிறுவர் பாதுகாப்பு நிதியம் - காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதியைக் கட்டிக்கொடுத்துள்ளது.

6 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய இந்தக் கட்டடம் 80 X16 அடி நீளம்கொண்ட இந்தக் கட்டடம் வகுப்பறைகளாகப் பயன்படுத்தப்படவுள்ளது. கடந்த 15 வருடமாக இடம்பெயர்ந்து பல இடங்களிலும் வசதியீனங்கள் மத்தியிலும் கற்றல் செயற்பாடுகளைக் குறைவின்றி செயற்படுத்தி வந்த காரணத்தால் இந்தவருடம் மாணவர் அனுமதி அதிகரித்திருப்பதாக அதிபர் தெரிவித்தார். தற்போது இந்தப் பாடசாலை தெல்லிப்பளை கூட்டுறவு வைத்திய சாலை கட்டடத்தின் வைத்தியர் தங்கும் விடுதியில் கல்விச் செயற்பாடுகளைச் ஆற்றிவருகிறது.

# வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள்

சுதுமலை —

தேசிய கலை இலக்கியப் பேரவையால் நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மாணவர்களுக்கு சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்ற 45 மாணவர்களுக்கு கடந்த வாரம் சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்பட்டதாக - நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் ப.தமிழ் மாறன் தெரிவித்தார்.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலர் திருமதி எம்.தெய்வேந்திரம், கணக்காளர் சி.மனோகரன் எனப் பலர் கலந்துகொண்டனர். (91)

# உழவு இயந்திரம் மோதி வயோதிபப் பெண் மரணம்

வடமராட்சி கிழக்கு —

மணற்காடு பகுதியில் பலசரக்குக் கடையொன்றில் பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவரை உழவு இயந்திரம் கடைக்குள் புகுந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் மரணமானார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் மணற்காடு - குடத்தனையைச் சேர்ந்த அந்தோனி முத்து லூர்த்தம்மா (வயது 65) என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

மணற்காடு இடைத்தங்கல் முகாமுக்கு முன்னால் இருந்த கடையொன்றில் அந்தப் பெண் நின்றவேளை கொங்கிறீற் கற்களை ஏற்றி வந்த உழவு இயந்திரம் மோதியதில் அதே இடத்தில் அவர் உயிரிழந்தார். (12)

# சுனாமி பாதித்த சிறுவருக்கு விளையாட்டு உபகரணங்கள்

சுதுமலை —

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் வழங்கியுள்ளதாக நிறுவன இயக்குனர் கி.யோ.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

முல்லைத்தீவு சுவாமியார் தோட்டத்தில் சென்.இசிடோர் ஆண்கள், திருக்குடும்ப கன்னியர்மடம் பெண்கள் ஆகிய சிறுவர் இல்லங்களுக்கே விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டு உபகரணங்கள், பூந்தோட்டப் பராமரிப்பு உபகரணங்கள், இசைக் கருவிகள், மின் அழுத்திகள், உலோக அலுமாரிகள் ஆகியன வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி சிறுவர் இல்லங்களில் 90 வரையான சிறுவர்கள் உள்ளனர். கியுடெக்- கரித்தாஸ் நிறுவனத்தின் சிறுவர் திட்டத்தின் கீழ் இரண்டு சிறுவர் இல்லங்களும் பராமரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (91)



சந்நிதியான் ஆச்சிரமம் நடத்திய நீரிழிவு நோயாளருக்கான வைத்திய சேவையின்போது டொக்டர் பொன்.சின்னத்தம்பி நோயாளர்களைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (14)

# சேவைநலன் பாராட்டு விழா

பருத்தித்துறை —

ஏழு ஆண்டுகளாக சேவையாற்றிய பருத்தித்துறை சேகர உதவிக் குரு அருட்திரு.ஜி.ஏ.சதீஸ் போதகரினதும், மூன்று வருடங்களாகச் சேவையாற்றிய உள்ளூர் பணியாளர் பி. விஜயா போதகரினதும் சேவைகளைப் பாராட்டுவதற்கான சேவை நலன் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

இந்த விழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சேகர திருப்பணியாளர் அருட்திரு டி.அழகராசா போதகர் தலைமையில் கட்டைவேலி கிறிஸ்தவ ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (12)

# சந்தேக நபர் சரண்

பருத்தித்துறை —

பருத்தித்துறை சந்தாதோட்டம் - சுதன் படுகொலை சந்தேக நபர் இராணுவத்தரப்புமூலம் பொலிஸில் சரணடைந்தார். இவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 6 திகதி வராத்துப்பளையில் வைத்து சித்திரன் சுதன் என்பவர் மண்வெட்டியால் அடித்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தப் படுகொலையின் சந்தேக நபரான பருத்தித்துறை கூழாவடியைச் சேர்ந்த நடராஜா வேலுச்சாமி என்பரே சரணடைந்தவராவார்.




# பெண்ணின் கலாசாரம்

ஒரு சமூகத்தின் மீது சுமத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாழும் முறை, அரசியல், கலைகள், ஆடைஆபரணங்கள் போன்றவற்றிலுள்ள தனித்தன்மை அந்த சமூகத்தின் கலாசாரமாகக் கெள்ளப்படுகிறது. வாழும் காலங்களில் ஒரு இனம் அடையாளம் காட்டப்படுகிற தன்மையை இந்தக் கலாசாரம் பிரதிபலிக்கிறது. சமூகத்தில் உள்ள பெண்களின் நடைமுறை பாவனையே இதில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனால் பெண்களது எண்ணங்கள், உணர்வுகள், செயற்பாடுகள், மனித வாழ்வை அவள் எவ்வாறு வடிவமைக்க விரும்புகிறாள் என்பவற்றை அவளால் முழுமையாக சரியான வித்த்தில் வெளிப்படுத்த முடிகிறதா என்பது பெரிய கேள்விக்குறியாகவே எம் கண்முன் நிற்கிறது. எந்த அளவுகோலுடன் இவள் இதைத் தீர்மானித்துக் கொள்கிறாள் என்பது இங்கே முக்கியமாகிறது.

இன்றைக்கு சமயம், கலை, பொருளா தாரம், இலக்கியம், தொடர்பூடகம் எனப் பல்வேறுபட்ட சகல கலாச்சாரச் செயற்பாட்டுத் தளங்களிலும் பெண்கள் ஈடுபட்டு வருவதை நாம் காண்கிறோம். ஆண்களால் மட்டுமே செய்ய முடியும் எனக் கருதப்படும் அபிவிருத்தி வேலைகள், தீர்மானம் எடுத்தல், ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல்,தலைமை ஏற்றல் போன்ற செயற்பாடுகளில் இன்றைக்குப் பல பெண்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எமது நாட்டில் நிலவிய போர்ச் சூழல் ஆண்களின் இயங்கு தளத்தில் ஓரளவு இடைவெளி ஏற்படுத்திய நிலையில், பெண்கள் வீட்டுக்குள் இருந்துவிட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதை கண்முன்னாலேயே நாம் பார்க்கிறோம். இங்கே பெண்களின் பங்களிப்புக்கான தேவை ஏற்படுமிடத்து, அவர்கள் வெளியே வந்து செயற்படுமிடத்து அவர்கள் வெளியே வந்து செயற்படுவதற்கான சாதகமான நிலை ஏற்படுகிறது. இவர்கள் தாம் சார்ந்த துறைகளின் செயற்பாடு களில் இந்த கலாசாரத்தை எவ்வகையில் பிரதிபலிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே இந்த கலாசாரத்தின் பெறுமதி கவனத்தில் கொள்ளப்படுகின்றது. பெண்களின் செயற்பாடுகளினூடாக கணிக்கப்படுகின்ற இந்த கலாச்சாரத்தை தீர்மானிக்கின்ற பொறுப்பும் பெண்களிடமே உள்ளதை நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். இந்தப் பொறுப்பை எத்தனை பெண்கள் சரியாக புரிந்து கொள்கிறார்கள். ஏதோ ஒரு அதிகார வர்க்கத்தால் பெண்கள் மீது திணிக்கப்பட்ட இந்த கலாச்சாரத்தின் தன்மை சரியானது தானா என்று எத்தனை பேர் சிந்திக்கிறார்கள். இந்த விதமாக அமைந்து விட்ட இந்த கலாசாரத் தின் ஆடம்பரங்கள் பெண்களுக்குத் தேவையா? என்ற கேள்வி இன்று பலராலும் முன்வைக்கப்படுகின்ற கருத்தாகிறது.

பட்டாடைகளும், நகைகளும், ஆடம்பரமான சடங்குகளும்தான் எமது கலாசாரம் என்பதை ஏற்றுக் கொள்ளும் அறியாமையிலிருந்து நமது பெண்கள் விழித்துக் கொள்ள வேண்டும். நகையும், பட்டாடையும் ஆடம்பரமான வாழ்வும்தான் தனக்குப் பெருமை தரும் என்று பெண் நினைப் பாளேயானால் அது போன்ற முட்டாள்தனம் வேறு இல்லை. தன் கல்வியாலும், தன்னம்பிக்கையாலும், ஆளுமையாலும், மனிதப் பண்புகளாலும் ஒரு பெண் நிமிர்ந்து நிற்பாளேயானால் அதுதான் சமூகத்தில் அவளுக்கு பெருமை தரும் விட யம். குறைந்தபட்சம் இந்த விதமாய் நிமிரும் பெண்கள் என்றாலும் தமது வாழ்வை எளிமையானதாகவும், ஆடம்பரமற்றதாகவும் ஆக்கிக் கொண்டால் சமூகத்தில் மற்றவர்கள் பின்பற்றக் கூடிய முன் உதாரணமாக திகழ்பவர்களாக இருக்க முடியும்.

போரினால் நலிவுற்றிருக்கும். நமது தேசத்தின் இன்றைய தேவை ஆடம்பரங்களை துறத்தல், எளிமையான வாழ்வை தேர்ந்தெடுத்தல் இது சாத்தியமாவது பெண்களின் செயற்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. சமூகத்தில் எந் தப் பிரச்சனை என்றாலும் அதற்கு முகம் கொடுக்கும் பெரும் பொறுப்பு பெண்களுக்கே உள்ளது. அநேகமான பெண்களின் வாழ் நிலை சராசரிக்கும் கீழாகவே அமைந்துள்ளது. போரின் நடுவேயான பல இழப்புகளை தாங்கியவர்களாகவே இவர்களில் பலர் இருக்கிறார்கள். இத்தகைய நிலைமையில் எமது கலாசாரங்களின் ஆடம்பரங்கள் சுமைகளாக அழுத்துவதை பெண்கள் அனுமதிக்கக் கூடாது. எமது இயற்கை வளங்களுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் எமது கலாச்சாரத்தை அமைக்கத்தவறினால் எமது இனம் பாரிய அழிவை எதிர்நோக்குவதை தவிர்க்க முடியாமல் இருக்கும்.


பொதுவாகவே பெண்கள் ஆடம்பர மோகம் கொண்டவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு. இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது என்பதை பலபெண்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய சமூகத்தில் பலவிடயங்களில் பெண்களே பெண்களுக்கு எதிரிகளாகவும் தம்மை அடையாளம் காட்டுகிறார்கள். பெண்ணே பெண்ணிடம் இருந்து விடுதலை பெற வேண்டும்.பெண்ணே பெண்ணை சமமாய் நடத்த முன்வரவேண்டும். சகமனிதரை நேசிக்கும் மனிதப் பண்பையும் எளிமையான வாழ்வையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தையும் எமது கலாசாரமாக பெண்கள் ஏற்றுக் கொள்வதே இன்றைய காலத்தின் தேவையாகிறது.



தாமரைச்செல்வி

# பரசிற்றமோல் நஞ்சாதல்

## (Paracetamol toxicity)



சென்றவாரத் தொடர்ச்சி...

பரசிற்றமோல் மாத்திரை (tablet), திரவம் (syrup), கப்சியூல் (capsule), மற்றும் சப்போசிற்றறி (suppository) வடிவங்களில் விற்பனையாகின்றது. திரவ பரசிற்றமோல் வெவ்வேறு செறிவுகளில் காணப்படலாம். எனவே அந்த மருந்துப் போத்தல்களில் எழுதியுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசித்ததன் பின் பயன்படுத்தத் தொடங்கலாம்.

| வயது | அளவு | |
|---|---|---|
| < 3மாதம் | வைத்திய ஆலோசனைப்படி மட்டும் | |
| 3 மாதம் - 1வருடம் | 60 – 120mg | 4-6 மணித் |
| > 1 -5 வருடம் | 120- 250mg | தியாலங் |
| 6 - 12 வருடம் | 250 - 500mg | களுக்கு |
| 12 வருடம் | 500 mg - 1g | ஒருமுறை |

சிறுவர்களுக்கு ஒரு கிலோகிராம் உடல்நிறைககு 15mg பரசிற்றமோல் என்ற வீதத்தில் ஒரு நாளுக்கு 4 தடவைக்கு மேற்படாது கொடுக்கப்படுதல் வேண்டும். இவற்றைவிட அதிகளவில் பயன்படுத்தும் போது நஞ்சாதல் விளைவுகள் ஏற்படுகின்றன.

இருமல், காய்ச்சல் போன்றவற்றுக்குரிய மருந்துகளிலும் குறிப்பிட்ட அளவுகளில் பரசிற்றமோல் காணப்படுகின்றது. எனவே சிறுவர்களுக்கு பரசிற்றமோல் கொடுக்கும்போது இந்த வகையான மருந்துகளையும் சேர்த்துக் கொடுப்பது நஞ்சாதல் விளைவுகளை ஏற்படுத்தும்.

வீடுகளில் பரசிற்றமோல் குளிசைகள், திரவ மருந்துப் பொருட்களை சிறுவர்களுக்குத் தெரியக்கூடிய, அவர்களின் கைகளுக்கு எட்டும் இடத்தில் வைப்பதால், அவர்கள் இலகுவில் அவற்றை உட் கொள்ளும் சந்தர்ப்பங்களை அதிகமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. (Accidental Poisoning)

கிருமித்தாக்கங்கள் ஏற்படும் போது உடல் வெப்பநிலை அதிகரித்தல் அதாவது காய்ச்சல் ஏற்படுதல் உடலின் ஒரு பாதுகாப்பு செயன்முறையாகக் கருதப்படுகின்றது. அத்துடன் 41°c இற்கு மேலாகக் காய்ச்சல் ஏற்படும்போதே அது உடலுக்குத் தீங்கு விளைவிக்கின்றது. எனவே பரசிற்றமோல் மூலம் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவது நோயைக் குணப்படுத்தும் செயன்முறையாகாது. அத்துடன் இந்தச் செயற்பாடு நோய் குணமாவதைத் தாமதப்படுத்தும். வளர்முக நாடுகளில் உள்ள சிறுவர்களின் போசாக்கு மட்டம் குறைவாகக் காணப்படுவதாலும், காய்ச்சல் ஏற்படும் போது உணவு உட்கொள்ளுதல் குறைவடைவதாலும் இவர்களின் குளுற்றாதியோன் அளவு குறைவாகக் காணப்படுவதால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளில் பயன்படுத்தும்போதே நஞ்சாதல் விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) ≥ 39°C காய்ச்சல் ஏற்படும் போதே பரசிற்றமோலைப் பயன்படுத்துமாறு வழிப்படுத்துகின்றது.

எனவே பரசிற்றமோலின் பாதுகாப்பான பயன்பாட்டுக்குப் பின்பற்றப்பட வேண்டியவை

- பரசிற்றமோல் பயன்படுத்தும் போது - முக்கியமாக சிறுவர்களுக்குக் கொடுக்கப்படும் போது அவர்களது உடல்நிறை, வயது என்பவற்றுக்கு ஏற்ற அளவுகளில் கொடுக்கவும்.
- திரவ பரசிற்றமோலை அதன் செறிவுக்கு ஏற்ப சரியான அளவுகளில் கொடுக்கவும்.
- ஒவ்வொரு முறை வாங்கும் போதும் மருந்துப் போத்தலிலுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும். வாசித்து விளங்க முடியாதவிடத்து மருந்து கொடுப்பவரிடம் அதனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.
- பரசிற்றமோல் பயன்படுத்தும்போது பரசிற்றமோலைக் கொண்டிருக்கும் ஏனைய மருந்து வகைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- 48 மணித்தியாலங்களுக்கு அதிகமாகப் பரசிற்றமோல் பயன்படுத்த வேண்டியிருப்பின் வைத்தியரிடம் செல்லவும்.
- காய்ச்சல் ஏற்படின் அது ≤ 39°C இலும் அதிகமாக இருந்தால் அல்லது சிறுவர்கள் காய்சசலினால் மிகவும் அவதியுறுகிறார்கள் எனில் அல்லது நோவுடன் கூடிய காய்ச்சல் உணரப்படின் மட்டுமே பரசிற்றமோல் பயன்படுத்தவும்.
- காய்ச்சலைக் குறைப்பதற்காக அதிகளவு நீர் பருகுதல், தண்ணீர் ஒத்தடம் கொடுத்தல், ஆடைகளைக் களைதல், மினவிசிகள் மூலம் அறை வெப்பநிலையைக் குறைத்தல் ஆகிய மாற்று வழிகளையும் முயற்சிப்பதன் மூலம் பரசிற்றமோல் பயன்படுத்துவதைத் தவிர்க்கலாம்.






- நிரணயிக்கப்பட்ட அளவுகளிலும் அதிகமாக பரசிற்றமோல் உள்ளெடுக்கப்பட்டதனை உணரும் போது அல்லது அவதானிக்கும் போது தாமதமின்றி உடன் வைத்தியசாலைக்குச் செல்லவும்.
- பெரியவர்கள் கொடுக்கும் பொருட்களை மட்டுமே உண்ணுவதற்கு அல்லது பருகுவதற்கு குழந்தைகளைப் பழக்கப்படுத்தவும்.
- மருந்துகளை அவற்றிற்கேயுரிய போத்தல்களில் மூடிகளை இறுக்கமாக மூடி சிறுவர்களுக்குத் தெரியாத அவர்களினால் எடுக்க முடியாத இடத்தில் வைக்கவும்.
- மருந்துகளை அவற்றின் உண்மையான பெயர்களில் குறிப்பிடவும். சிறுவர்களுக்கு மருந்துக்கள் கொடுக்கும் போது அவற்றினை இனிப்புப் பண்டம் எனக்குறிப்பிட வேண்டாம்.
- சிறுவர்கள் பெரியவர்களைப் பின்பற்றும் இயல்புடையவர்கள், எனவே பெரியவர்கள் சிறுவர்களின் முன்னால் மாத்திரைகளை உட்கொள்வதைத் தவிர்க்கவும்.
- காலாவதியான மற்றும் தேவையற்ற மருந்துகளை தண்ணீரில் கரைத்து அழித்துவிடவும் அவற்றை வீசி எறியவேண்டாம்.

சி.குணரத்தினம்
மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# உடல் ஆரோக்கியத்தின் முதல் எதிரி கோலா. . .



பழக்கம் பொல்லாதது என்கிறார்கள். எமது பிள்ளைகள் எந்தப் பழக்கத்தையும் பெற்றோர்களாகிய நம்மிடமிருந்தே கற்றுக் கொள்கிறார்கள். எனவே எமது பிள்ளைகள் முன்பாக எதைச் செய்தாலும், மிகக் கவனத்தோடும், அவதானத்தோடும் நாம் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

சாப்பிட்ட பின்பு தண்ணீர் அருந்துதல் என்பது, எமது வாழ்வில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகிறது. இன்றைய கால கட்டத்தில், ஒரு புள்ளி விபரம் எடுத்த எமது பிள்ளைகளில் சொற்ப வீதத்தினரே, தண்ணீரை விரும்பி அருந்தும் பழக்கத்தை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது அதிர்ச்சியான தகவல்தான். சாப்பாட்டுக்குப் பின்பு தண்ணீருக்குப் பதிலாக, இனிப்பான கொக்கோ கோலா பானத்தை எமது பிள்ளைகளுக்குக் கொடுத்துப் பழக்கியிருப்பதால், தண்ணீரைக் கண்டால் நீண்ட தூரம் ஓடும் சுபாவம் பிள்ளைகளிடம் தொற்றியிருக்கிறது.

எமது பிள்ளைகளின் உடல் ஆரோக் கியத்தின் முதலாவது எதிரி, இந்தக் கோலா என்பதை நீங்கள் அறிவீர்களா?

2005ஆம் ஆண்டு செப்டெம்பரில் கணக்கை முடித்து இலாபம் பார்த்த கோலா நிறுவனத்தார், தமது வருடாந்த இலாபம் வீதத்தால் எகிறிக்குதித்து, 14.22 பில்லியனாக இலாபம் உயர்ந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். என்ன காரணம்? இந்தக் கோலாவும், Fanta வும் குடிப்பவர்கள், சமுதாயத்தில் செல்வாக்கானவர்கள் என மாயையை, தமக்குள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாம் உலக நாடுகளில் பிள்ளைகளுக்குச் சிறந்த குடிபானம் கோலாதான் என்ற மாயைக்கு உட்பட்டு, அதையே வாங்கியும் கொடுத்து வருகிறார்கள். தாய்ப்பாலுக்குப் பதிலாக, இந்தக் கோலாவை பச்சிளம் குழந்தைகளுக்குக் கொடுத்து வரும் கொடுமையும் நடந்து வருகிறது. ஆபிரிக்க நாடான சாம்பியாவில், பிள்ளைகள் வெறும் Fanta வைக் குடித்து வளர்வதால், Fanta baby என்ற அடைமொழியுடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதன் காரணமாக இங்கு அரசினால் கோலா விற்பனை தடை செய்யப்பட்டிருக்கிறது.

கோலா உற்பத்தி நாடான அமெரிக்காவின் சில பாடசாலைகள் இப்பொழுது தமது வளாகத்தில், கோலா விற்பனைக்குத் தடைவிதித்துள்ளன. இன்று பெரிய அளவில் தன்னை விளம்பரம் செய்து கொண்டு, வருடத்துக்கு 42 பில்லியன் போத்தல்களும், Canகளும் விற்றுத் தீர்க்கப்படுகின்ற நிலையில், எமது பிள்ளைகளில் எத்தனை பேருக்கு இந்தப் பானம் எந்த அளவுக்கு மோசமானது என்பது தெரிந்திருக்கிறது? என் பிள்ளை தண்ணீர் குடிக்கமாட்டான் என்று சொல்லிச் சொல்லி, நம்மில் ஆயிரம் ஆயிரம் பேர், நமது பிள்ளைகளுக்கு கோலா என்ற மோசமான குடிபானத்தையே கொடுத்துப் பழக்கப்படுத்தி வருகிறோம். இது என்று நிற்கப் போகிறது? இதைக்குடிப்பதால் ஏற்படும் தீய விளைவுகளை, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குத் தெளிவாகச் சொல்லிக் கொடுக்கின்றீர்களா?

சிகரெட் புகைப்பதால் வரும் மிக மோசமான உடற் கெடுதிகளை, இந்தக் கோலா அருந்தும் பழக்கமும் கொண்டு வந்து சேர்க்கிறது என்பது நமக்குத் தெரிந்திருக்கின்றதா?



Coke என்று சொல்லப்படும் இந்தக் கோலா நிரம்பிய ஒரு Canஐ எடுத்தால், அதில் இருப்பதில் 10 வீதமானது வெறும் சீனிதான். இன்று 155 நாடுகளில் விற்கப்படும் இந்தக் கோலாவின் 12 அவுண்ஸ் அளவில் 9 தேநீர்க்கரண்டி அளவு சீனி இருப்பதை நீங்கள் அறிவீர்களா? ஒரு தகவலின் படி இந்தக் கோலாப் பிரியர்களுக்கு, கண்களில் நீர்வடிதல், காதுகளில் தேவையற்ற ரீங்காரம், செவிப்புலனில் பாதிப்பு, தலைவலி, தலைச்சுற்று, மனக் குழப்பம், ஞாபக மறதி, தூக்கமின்மை, நாக்குழறல், மனப்பதட்டம் என்றெல்லாம் நோய்கள் வரவாய்ப்புண்டு என்ற பெரியதொரு அணுகுண்டைப் போடுகிறார்கள் அதிகாரிகள்.

எமது பிள்ளைகள் இதையெல்லாம் அறிவார்களா? பெற்றோர்களே, கோலா அருந்துவதின் தீமைகளைப் பிள்ளைகளுக்கு விளக்கமாகச் சொல்லிக் கொடுங்கள். அவர்கள் வளமான எதிர்காலம் ஏன் அநியாயமாகப் பாழடிக்கப்பட வேண்டும்? எப்பொழுதுமே தண்ணீரை அருந்தப் பழக்குங்கள். அந்தத் தண்ணீரையே அதிகளவு அருந்தப் பழக்கி வாருங்கள். இதன் விளைச்சல்கள், நல்ல அறுவடையை வீடு கொண்டு சேர்ப்பது திண்ணம். தண்ணீரைக் கொடுக்காது, பிள்ளைகளை நோயாளிகளாக நீங்கள் ஏன் கண்ணீரைக் கொட்டி, பிள்ளைகள் நலம் வேண்டி அழுகிறீர்கள்?

# தெரிந்த உறக்கம்... தெரியாத இரகசியங்கள்



கடன் வாங்கும் பழக்கம் பலருக்கு இரத்தத்தில் ஊறியதொன்றாக இருக்கிறது. நாகரிக யுகத்தின் வாழ்க்கை மற்றும் வேலை மாற்றங்களால் தூக்கத் திலும் கடன் வைக்கும் பழக்கம் இப்போது உலகமெங்குமே பரவிக்கிடக்கிறது.

'தூங்காதே தம்பி தூங்காதே...' என்று பாடிய பட்டுக்கோட்டையார் இப்போது இருந்தால்... தூங்கு தம்பி தூங்கு என்று தாலாட்டுப் பாட்டை எழுதும் நிலைக்குத் தள்ளப்படுவார் அந்த அளவிற்கு இப்போதெல்லாம் விடிய விடிய விழித்து இருக்கும் மக்கள் பெருகிவிட்டது.

விளைவு... இதய நோய், நீரிழிவு நோய் போல தூக்கமின்மையும் ஒரு நோயாக உருவெடுத்து உலுக்கிக் கொண்டிருக்கின்றது. மற்ற நோய்கள் வந்தால் பதறியடித்து மருத்துவரிடம் ஓடும் மக்கள், இதை ஒரு பிரச்சினையாகவே கருதுவதில்லை என்பது தான் அதிர்ச்சி தரும் உண்மை. இன்று சொல்லப் போனால் தூக்கமின்மை நோயுள்ள பலருக்கும் இப்படி ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதே தெரிவதில்லை. ஆனால், இதை கண்டு கொள்ளாமல் விட்டால் தூக்கப் பிரச்சினை உயிரைக் குடிக்கும் எமனாகி விடும் என்ற அதிர்ச்சி தரும் தகவல்.

மனிதனுக்கு சாதாரணமாக ஏழு மணித்தியாலம் தூக்கம் தேவை. ஒரு மணித்தியாலம் கூடலாம், குறையலாம். இந்த அளவுக்கு குறைந்தாலும் ஆபத்து... அதிகமானால் நல்லதில்லை. வெளிச்சமும், இரைச்சலுமாக ஆகிப்போன வாழ்க்கை முறையில் தொலைக்காட்சி பெரும்பாலான வீடுகளில் தூங்கும் நேரத்தை மாற்றி அமைத்து விட்டன.

இயல்பானவர்களுக்கு இது பிரச்சினை என்றால், தூக்கமின்மை நோய் இருப்பவர்களுக்கு தொல்லை வேறு. இரவு முழுக்கத் தூங்க முடியாமல் அவதிப்பட்டு காலையில் எழுந்து கடமையைச் செய்பவர்களுக்கு பகல் முழுக்க தூக்கம் வந்து தொலைக்கும். அவர்கள் வாகனம் செலுத்துபவராகவோ, விமானம் ஓட்டியாகவோ, சத்திர சிகிச்சை செய்யும் மருத்துவராகவோ இருந்தால் அது எல்லோருக்கும் ஆபத்து தான்.

சிலருக்கு உடல் நிலை சரியில்லை என்றால் தூக்கம் வராது .. சிலருக்கு புது இடத்துக்குப் போய் படுத்தால் தூக்கம் வராது. சிலருக்கு சந்தேகமான விடயம் என்றால் தூக்கம் வராது. இதெல்லாம் தற்காலிக விடயங்கள்.

பலருக்கு குடும்பக் கவலை, கடன் தொல்லை, ஏதாவது ஒரு விடயத்தில் தவறு இருப்பதால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை என கவலைப் பட ஏராளமான விடயங்கள் இருக்கின்றன. தூங்கும் நேரத்தில் தான் இந்த கவலைகள் மலைபோல வந்து அழுத்தும் இதனால் தூக்கம் கெட்டுப் போகும்.

ஆனால், நல்ல தூக்கம் என்றால் அதில் மனநிறைவு வேண்டும். ஒரு நல்ல விருந்தை சாப்பிட்டால் வயிறு நிரம்பியது போல உணர்ந்து மகிழ்கிறோமே... அது போல காலையில் தூக்கம் முடிந்து எழுந்ததும் ஆகா நிம்மதியான தூக்கம் என்ற உணர்வு எழ வேண்டும். அது இல்லாமல் ஏன் தான் விடிந்ததோ தெரியவில்லையே.. இன்னும் கொஞ்ச நேரம் படுத்திருக்கலாம். என்றெல்லாம் நினைத்

## நேரம் ஒதுக்குங்கள்

* வாழ்க்கையை முழுவதும்அனுபவிக்க நேரம் ஒதுக்குங்கள்
  இது வெற்றியின் இரகசியம்
* சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
  இது செயல் திறனின் பிறப்பிடம்
* விளையாடுவதற்கு நேரம் ஒதுக்குங்கள்
  இது இளமையின் இரகசியம்
* வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
  இது மகிழ்ச்சியின் பிறப்பிடம்
* நட்பாக இருக்க நேரம் ஒதுக்குங்கள்
  இது மகிழ்ச்சியின் பிறப்பிடம்
* கனவு காண்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
  இது ஆன்மாவை நட்சத்திரங்களுடன் பின்னிப் பிணைக்கிறது
* சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
  இது வாழ்க்கைத் துன்பங்களை நீக்க உதவும் ஆன்மாவின் இன்னிசை
* இறைவனுக்காக நேரம் ஒதுக்குங்கள்
  இது ஒன்றே வாழ்வின் நிலையான முதலீடு

# அறிவுக்கு அயடின்

மனித உயிருக்கு அத்தியாவசியமான ஓர் இயற்கை மூலப்பொருள் அயடின் இதன் பற்றாக்குறையால் ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்கு உபயோகிக்கப்படும் உப்பே அயடின் கலந்த உப்பாகும். சாதாரண கறி உப்பில் அயடின் உப்பின் சேர்வையின் கூறுகள் சிறிதளவு கலக்கப்பட்டிருக்கும்.

அயடின் கலந்த உப்பானது சுவை, மணம் யாவற்றிலும் சாதாரண உப்பை போலவே இருக்கும். அயடின் கலந்த உப்பைக் கழுவாமல் பாவிக்க வேண்டும்.

மூளை, உடம்பு இரண்டும் ஒழுங்காக வளர்வதற்கும், விருத்தியடைவதற்கும் அயடின் இன்றியமையாததாகும். அயடின் இல்லாவிட்டால் தொண்டைக்கழலை, சோம்பல், சிரத்தையின்மை, இலகுவாககளைப் படையும் சுபாவமும் ஏற்படலாம்.

அயடின் குறைபாட்டால் சிசுவின் மூளையும், உடம்பும் நிரந்தரமாகவே வளர்ச்சி குன்றிவிடும். கர்ப்ப காலத்தில் அயடின் அத்தியாவசியமாகும். அயடின் பற்றாக்குறையுள்ள ஒரு பெண் அசாதாரணமான குழந்தையைப் பெறக்கூடும். சிகிச்சை செய்யாமல் விட்டால் அந்த குழந்தை வளர வளர அதன் மனவளர்ச்சியும், உடல்நிலையும் சீரழிந்து போகும்.

அயடின் பற்றாக்குறை மாணவர்களின் கல்வித்திறனைக் குறைத்துவிடும். அயடின் பற்றாக்குறையுள்ள பெண்களுக்கு கருச்சிதைவு, சிசுக்கள் இறந்து பிறத்தல், பிறக்கும் குழந்தைகள் அங்க குறைபாடுடையவர்களாகவும், மந்த புத்தியுள்ளவர்களாகவும் அமையலாம்.

உடம்பில் போதுமான அளவு அயடின் இல்லாத நிலையில் தைரோயிட் சுரப்பி பெருப்பதால் தொண்டையில் உண்டாகும் வீக்கமே தொண்டைக்கழலையாகும்.

அயடின் உப்பை தினமும் உட்கொள்வதால் இன்றைய சந்ததியையும், எதிர்காலச் சந்ததியையும் அயடின் பற்றாக்குறையால் ஏற்படும் விளைவுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். கடல் உணவுகளில் அயடின் சத்து இயல்பாகவே காணப்படுகின்றது.

வழக்கமாக சமையலில் அயடின்உப்பைஉபயோகிக்கலாம். அதன்மூலம் அயடின் பற்றாக்குறை நோய்கள் குறைவடையும்.

அயடின் உப்பை சூரிய வெளிச்சத்திலும், ஈரலிப்பிலும் நீண்டகாலம் வைப்பதால் அயடின் சேதமாகி விடும். உப்பை திறந்து வைத்தால் அயடின் அழிந்து விடும். இதனை காற்றுப்புகாத பிளாஸ்டிக் கண்ணாடி பாத்திரத்தில் இட்டு மூடி வைத்தால், அயடின் உப்பை சாதாரண உப்பு போன்று சேகரித்து வைக்கலாம். அயடினை அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

# ஊடகவியலாளர் படுகொலை உடன் நிறுத்தப்படவேண்டும்

## மன்னார் ஊடகவியலாளர் சங்கம் வேண்டுகோள்

மன்னார்—

கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ளத் திராணியற்றவர்களின் அடாவடித்தனங்கள் எல்லை மீறிப் போவதையே ஊடகவியலாளர் படுகொலைகள் வெளிப்படுத்துகிறது என மன்னார் ஊடகவியலாளர் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாட்டில் அவசரகாலச் சட்டம் என்று மீளப் பிரகடனப்படுத்தப்பட்டதோ அன்று தொடக்கம் ஊடகவியலாளர்கள் மீதான அனைத்துவிதமான வன்முறைகளும் அரங்கேறத் தொடங்கியுள்ளது என்பதையே திருகோணமலை பத்திரிகையாளரின் படுகொலை வெளிப்படுத்தியுள்ளது.

சுடர்ஒளி பத்திரிகையின் திருகோணமலைச் செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் கொலைச் செய்தி கேட்டு நாம் அதிர்ச்சியடைந்துள்ள இந்த நேரத்தில் -

கொலைஞர்களே! உங்கள் கொலை வெறிக்குப் பலியாக ஊடகவியலாளர்கள் செய்கின்ற பாவம் என்ன? உங்களால் மேற்கொள்ளப்படுகின்ற படுகொலைகள், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றுக்கு நீங்கள் கூறும் காரணம் - பத்திரிகையாளர்கள் படிதாண்டக்கூடாது என்பதா?

மாதந்தோறும் நிறைவேற்றப்படுகின்ற அவசரகாலச் சட்டத்தின் மூலம் பத்திரிகையாளர்களும் அவர்களைச் சார்ந்தவர்களுமே பாதுகாப்புக் கெடுபிடிகள், சோதனைகள், கைதுகள், தடுத்துவைப்புக்கள் என்பவற்றுக்கு முகம்கொடுக்கும் நிலையையே நாம் தொடர்ச்சியாகக் காண்கின்றோம்.

நடைமுறையிலுள்ள அவசரகாலச் சட்டம் மாற்று ஆயுதக் குழுக்களையோ, தனிமனித ஆயுததாரியையோ கட்டுப்படுத்தியதாகத் தெரியவில்லை. மாறாக தமிழ் ஊடகத் துறையின் செயற்பாடுகளை முடக்குவதாகவே இந்த அவசர காலச் சட்டம் இருக்கிறது.

எதற்கெடுத்தாலும் செய்தியாளர் மாநாட்டை நடத்தும் அரச உயர் மட்டங்களும், படைத்தரப்பும் அவசர காலச் சட்டம் தொடர்பாக ஊடகங்களின் செயற்பாடுகள், நடவடிக்கைகள், அவற்றின் சட்ட மூலங்கள் எதைச் சொல்கிறது என்பதை இது வரையிலும் தெளிவுபடுத்தியதாகத் தெரியவில்லை.

அதிகரித்துச் செல்லும் ஊடகவியலாளர்களின் படுகொலைப் பட்டியல் தமிழ் ஊடகவியலாளர்கள் இருப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளதோடு, அவர்களின் பாதுகாப்பும், வாழ்வியல் உரிமையும் நிச்சயமற்றது என்னும் எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளது.

ஊடகவியலாளர்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் ஜெனீவா உடன்படிக்கை கூறுகிறது.

இதற்கு மாறாக அரச படைகளோ, பிரத்தியேக ஆயுததாரிகளோ மீறிச் செயற்பட்டால் அது யுத்த குற்றமெனவும் உடன்படிக்கை தெளிவுபடுத்துகிறது.

ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாக்க முனையும் ஊடக அமைப்புக்களும், ஜெனீவா உடன்பாட்டைக் கையாள்பவர்களும் இந்த விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கியூடெக்-கரித்தாஸ் நிறுவத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு கடற்தொழிலாளர்களுக்கு வலைத்தொகுதிகள் வழங்கப்பட்டன. வாழ்வாதார திட்ட இணைப்பாளர் எவ்.ரட்ணகுமார் பயனாளி ஒருவரிடம் வலைத் தொகுதியை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## கர்ப்பிணி மரணமான சம்பவம்

# விசாரணை நடத்த மகிந்த உத்தரவு!

வவுனியா—

வவுனியா பொது மருத்துவமனையில் கடந்த 7ஆம் திகதி மகப்பேற்றின் போது பெண் ஒருவர் மரணமான சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிக்கை ஒன்றை கோரியிருப்பதாக அவரது ஊடக செயலர் சந்திரபால லியனகே சுகாதார அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

மரணமானவரின் பெற்றோர் அண்மையில் நடத்திய மறியல் போராட்டத்தின பின்னர் ஜனாதிபதிக்கு இது தொடர்பாக கோரிக்கை மனு ஒன்றை அனுப்பியிருந்தனர்.

இதனை கருத்திற்கொண்டு ஜனாதிபதி விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக அவரின் ஊடக இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

# வட்டக்கச்சி - பெரியகுளம் பகுதியில் பொதுமண்டபம் திறந்து வைப்பு

இராமநாரபுரம்—

வட்டக்கச்சி - பெரியகுளம் பகுதியில் நியாப் திட்டத்தின் நிதியுதவியுடன் பொதுமண்டபம் கடந்த செவ்வாய்க் கிழமை காலை 11 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இராமநாதபுரம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- பொதுச் சுடரை பெரியகுளம் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினரும், பொது மண்டபத்தை அமைத்துக் கொடுத்த வருமான அன்ரனி தேவதாஸ் ஏற்றி வைத்தார்.

மங்கள விளக்கை கமநல உதவி ஆணையாளர் நாமகள், நியாப் திட்ட பிரதம பொறியியலாளர் சண்முகசுந்தரம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை வட்டக் கட்சி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திருமாறன் ஏற்றிவைத்தார். மண்டபத்தின் நுழைவாயிலை உதவி அரச அதிபர் திறந்து வைத்தார்.

தலைமை அலுவலகத்தை ஜெயராஜி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.மண்டப அறைகளை பெரியகுளம் கிராம அலுவலர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை பிரதம குரு ஜெயம், பங்குத் தந்தை ரவிராஜ் ஆகியோரும், சிறப்புரையை நாமகளும், பிரதமவிருந்தினர் உரையை ஜெயராஜியும், வரவேற்புரையை பெரியகுளம் மாதர் சங்க உறுப்பினர் திருமதி உருத்திரா ஆகியோரும் நிகழ்த்தினர்.

கருத்துரைகளை ஐயனார் பெரியகுளம் வித்தியாலய அதிபர் திருக்கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ் விழி, கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பத்மநாதன் ஆகியோரும், நன்றியுரையை நியாப் திட்ட உத்தியோகத்தர் விஜயகிருஸ்ணனும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்தின்கீழ் கல்மடு நகர், குமாரசாமிபுரம், தர்மபுரம் மேற்கு, பெரியகுளம், மயில்வாகனபுரம் ஆகிய பிரதேசங்களில் பொது மண்டபம், கிணறு ஆகியன 10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சமூக மட்ட குழுக்களுக்கான பயிற்சி வகுப்பு பெரிய பரந்தனில்

பரந்தன்—

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கார்ப் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பெரிய பரந்தன் கிராமத்தில் சமூக மட்ட குழுக்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன.

இந்த நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி சமூக பொருளாதார அபிவிருத்தி சங்கத் தலைவர் வே.வீரபாகு தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சமூக மட்ட குழுக்களை சேர்ந்த 25 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றனர்.

இந்த பயிற்சி வகுப்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்ட பணிப்பாளர் சுடர், கிராம அலுவலர் கனகராசா, நிகொட் திட்ட கிராம சேவை அலுவலர் திலீபன், கண்டாவளைப் பிரதேச செயலக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் கொஸின்ஸ்ரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் தலைமைத்துவம் முகாமைத்துவ தொடர்பாடல் கணக்கு வைப்பு முறை போன்ற தலைப்புகளில் இந்த பயிற்சி வகுப்புகள் துறை சார் விரிவுரையாளர்களால் நிகழ்த்தப்பட்டது.

# இராணுவ அட்டூழியங்களை கண்டித்து நெடுங்கேணியில் கண்டனப் பேரணி

நெடுங்கேணி—

தமிழர் தாயகப் பிரதேசத்தில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள அட்டூழியங்களை கண்டித்து நெடுங்கேணி பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

காலை 9மணிக்கு நெடுங்கேணி மகாவித்தியாலயத்திலிருந்து பேரணி ஆரம்பிக்கப்பட்டு நெடுங்கேணி பிரதேச செயலகத்தை சென்றடைந்தது. அங்கு கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

வெகுஜன ஒன்றியத் தலைவர் சதீஸ் தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவன் சுதர்சன் உரை நிகழ்த்தினார்.

இதில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம், நோர்வே அமைச்சர், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், இலங்கை ஜனாதிபதி ஆகியோருக்கான மகஜர்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

## கட்டுமாணப் பயிற்சிப் பாசறை

மன்னார்—

மன்னார் விக்ரர் கட்டுமானப் பயிற்சிப் பாசறையின் 14 ஆவது அணியின் பயிற்சி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பாசறையில் சிறப்புரையை தமிழீழ அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார்.

இதேவேளை - இத்திக்கண்டல் கிராமத்தில் மகளிருக்கான பயிற்சிப் பாசறை இத்திக் கண்டல் கிராமியப் பொறுப்பாளர் பைரவி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரையை மன்னார் மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ஜான் நிகழ்த்தினார்.

## அணைக்கட்டு உடைப்பெடுப்பு

பூநகரி—

பூநகரி - முட்கொம்பன் சின்னப் பல்லவராயன் அணைக்கட்டு உடைப்பெடுத்துள்ளதால் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்திலுள்ள மக்கள் கடந்த பல காலமாக அதிக துன்பங்களைச் சந்தித்துள்ளனர். அந்த வகையில் கிராம மக்கள் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட போது நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவித்தனர். (பூ)

## பற்சிகிச்சை முகாம்

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு- காயான்மடு மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாம் மற்றும் சுகாதார விழிப்பூட்டல் கருத்தரங்கு என்பன நேற்று முன்தினம் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினரால் நடத்தப்பட்ட இந்த சிகிச்சை முகாமில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

அத்துடன் சுகாதார விழிப்பூட்டல் கருத்தரங்கில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் வருகை தந்திருந்தனர். இந்த முகாமில் பற்பாதுகாப்பு சுத்தம் பேணுதல் உட்பட பல்வேறு விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ சுகாதாரசேவைகள் பொறுப்பாளர் செல்வக்குமார், சுகாதாரப் பரிசோதகர் சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



யாழ். குடாநாட்டிலிருந்து பாதுகாப்புக் கருதி வன்னிப்பிரதேசத்துக்கு இடம் பெயர்ந்து வரும் மக்களை முதலாவது படத்திலும், மல்லாவி நலன் பேணும் நிலையத்தில் தங்கியுள்ள மக்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## மாதாந்த பொதுக் கூட்டம்

பூநகரி—

பூநகரி விவசாய அமைப்புக்களின் ஒன்றியத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை பூநகரி கமநல கேந்திர நிலையத்தில் காலை 11 மணியளவில் நடைபெற்றது.

பூநகரி விவசாய அமைப்புகளின் தலைவர் இரா.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பூநகரி பெரும்பாக உத்தியோகத்தர் என்.சுந்தரமூர்த்தி, பூநகரி விவசாயப் போதனாசிரியர் சதீஸ் ஆகியோர் ஆலோசகராகக் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் விவசாயத்திட்டங்கள் தொடர்பாக சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு, விவசாயத் தலைவர்களுக்கான சில ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டதாக பூநகரி விவசாய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் இரா.செல்வராசா தெரிவித்தார். (பூ)

நமது ஈழநாடு

வைர வரிகள்

செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

திருக்குறள்

## நமது நோக்கு

# பந்து அரசின் கையில்

போர் நிறுத்த உடன்பாட்டை அமுலாக்கம் செய்வது தொடர்பான பேச்சுக்களை ஜெனீவாவில் நடத்த விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஒஸ்லோவைத் தவிர வேறொ[illegible] பேச்சு நடத்தத் தயார் என்று அரசாங்கம் முரண்டு பிடித்துக் கொண்டிருந்த கட்டத்திலும் கூட-புலிகள், ஒஸ்லோவில்தான் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டில் இருந்து விட்டுக்கொடுத்து ஜெனீவாவில் பேச இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் புலிகள்தான் பேச்சு நடத்த வரவில்லை என்று இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்குப் போட்ட நாடகம் இப்போது நெருக்கடிக்குள்ளாக்கப் பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை புலிகள் இணங்காத நிபந்தனைகளை முன்வைத்து - அவர்களை ஆத்திரமூட்டும் வன்முறைகளை ஏவிவிடுவதன் மூலம் பேச்சுக்களில் இருந்து அவர்களைத் தூர விலக்கி வைக்க எத்தனித்தது.

அதாவது, புலிகள் சமாதான முயற்சிகளில் நம்பிக்கையற்றவர்கள் என்றும், அவர்கள் தான் மெல்லமெல்ல போருக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகவும் சர்வதேசத்துக்குக் காட்ட முற்பட்டது.

இதனால் தான், புலிகளை பேச்சுக்களில் கலந்து கொள்ளாமல் செய்யும் நோக்கில் ஒஸ்லோவில் பேச முடியாது என்ற 'பொறியை' அரசாங்கம் வைத்தது. பேச்சுக்கான இடம் மட்டுமே சமாதான முயற்சிக்கு தடையாக இருக்கக் கூடாது என்ற கோணத்தில் புலிகள் சிந்தித்து ஜெனீவாவில் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

ஜெனீவாவில் பேச்சு நடத்த புலிகள் இணக்கம் தெரிவித்தது இலங்கை அரசுக்கு பெரிய நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது. ஏனென்றால் ஜெனீவாவில் பேச்சுகள் நடைபெறவேண்டுமானால் அரசாங்கம் நிறையவே செய்ய வேண்டிய நிலை ஒன்று இருக்கிறது.

இதுதவிர, புலிகளை யுத்தத்தை நோக்கி இழுப்பதற்காக, தயார்ப்படுத்தப்பட்டு முடுக்கி விடப்பட்ட இராணுவ இயந்திரத்தையும் அதன் துணை ஆயுதக் குழுக்களையும் கட்டுப்படுத்தி முடக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உருவாகியிருக்கிறது.

தமிழர் தாயகத்தில் சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டு மக்கள் நிம்மதியாக வாழக்கூடியதொரு சூழலில் தான் பேச்சுகளில் கலந்துகொள்வோம். இல்லையேல் பேச்சுகள் நடைபெறாது எனப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

இதனால் உடனடி நடவடிக்கையாக தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்டிருக்கும் அத்தனை இராணுவ வன்முறைகளும், படுகொலைகளும் நிறுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

அண்மைக்காலத்தில் பெருமளவிலான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு மக்கள் அச்சத்தின் பிடியில் சிக்கியிருந்த ஒரு சூழலில் புலிகள் எடுத்த நிலைப்பாட்டின் மூலம் மீண்டும் அமைதி நிலவும் சாத்தியங்கள் உருவாகியிருக்கிறது.

ஒரு புறத்தில் தமிழ் மக்கள் மீது இராணுவ வன்முறைகளை ஏவி விட்டுக்கொண்டு மறுபுறத்தே புலிகள் என்றும், புலிகள் தான் கொல்கிறார்கள் என்றும் படுகொலைகளை நியாயப்படுத்தி வந்தது அரசாங்கம்.

அதேவேளை, தினமும் பலரைப் படுகொலை செய்து புலிகளை ஆத்திரமூட்டி அவர்களைப் போருக்குள் இழுத்துக் கொண்டு வருவதுதான் அரசின் திட்டமாக இருந்தது.

இப்படிப்பட்ட சூழலில் பேச்சுக்களுக்கே தயாராக இல்லாமல் இருந்த அரசுக்கு புலிகளின் முடிவு அதிர்ச்சியாகவும், நெருக்கடியைக் கொடுப்பதாகவுமே அமைந்திருக்கும்.

இப்போது ஜெ[illegible]வாவில் பேச்சுகளை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதாவது பந்து இப்போது அரசின் கைகளில்தான் உள்ளது.

தமிழர் தாயகத்தில் இராணுவ வன்முறையைக் கட்டுப்படுத்தி, ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுக்குள் கொண்டுவந்து, அமைதியான சூழலை ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகவுள்ளது.

இவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்தினால் பேச்சுக்களுக்கு எப்போதும் தயார் என்பது மட்டுமன்றி-பேச்சுக்களில் பங்கேற்பதற்கான தமது தரப்பு பிரதிநிதிகளையும் புலிகள் அறிவித்து விட்டனர்.

புலிகள் காட்டியிருக்கும் இந்த வேகத்துக்கு அரச தரப்பு ஈடாக செயற்பட முடியுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். அப்படி அரசும் வேகமாகச் செயற்பட்டால்தான் ஜெனீவாவில் பேச்சுகள் அடுத்தடுத்த கட்டங்களை நோக்கி நகரும்.

போர் நெருக்கடி தீவிரமடைந்துள்ள ஒரு கட்டத்தில் அரசு ஜெனீவாவில் சமாதானப் பேச்சுக்களுக்குப் புலிகளை கொண்டுசெல்லும் வகையில் நடந்துகொள்ளப் போகிறதா? அன்றி தொடர்ந்தும் போருக்கான முனைப்பிலேயே தீவிரம் காட்டப் போகிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eczhanaadu.com

## நாடும் நடப்பும்



மகிந்த சிந்தனைகள்

# ஒகஸ்ட் மாதம் உயர்தரப் பரீட்சை நடத்துவது குறித்து ஆலோசனை

கொழும்பு —

2007ஆம் ஆண்டு முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒகஸ்ட் மாதத்தில் நடத்துவது குறித்து பரீட்சைத்திணைக்களம் ஆராய்ந்து வருகிறது.

ஒகஸ்ட் மாதத்திலேயே நடைபெற்று வந்த க.பொ.த உயர்தரப் பரீட்சைகள், 2001 ஆம் ஆண்டு முதல் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுவதால், பல்கலைக்கழக அனுமதியில் தாமதம் ஏற்பட்டதைக் கருத்திற் கொண்டே கல்வி அமைச்சு இந்த ந[illegible]வடிக்கையை மேற்கொண்டது.

அத்துடன், பரீட்சைத் திணைக்களத்துக்கு ஒகஸ்டில் பரீட்சையை நடத்துவது இன்னொரு பிரச்சினையாக இருந்தது.

அதாவது, டிசெம்பரில் நடைபெறும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதில் பரீட்சைத் திணைக்களம் மும்முரமாக இருப்பதால் ஒகஸ்டில் உயர்தரப் பரீட்சையை நடத்துவது சிரமமானதாக இருக்கிறது.

அதேவேளை, ஏப்ரலில் பரீட்சையை நடத்துவதால் உயர்தர மாணவர்கள்-பண்டிகைக்காலத்தில் படிப்பதில் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள்.

இதனால் மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக அனுமதி தொடர்[illegible]ான நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தினால், மீளவும் ஒகஸ்ட் மாதத்திலேயே உயர்தரப் பரீட்சையை நடத்த முடியும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களம் இது தொடர்பான அறிக்கை ஒன்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பியுள்ளது.

இதேவேளை, பரீட்சையை ஒகஸ்டில் நடத்துவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிசின் கருத்தைக் கோரியுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்[illegible]தரிவித் தார்.

# மினிபஸ் சங்கம், தேவாலயம் அடித்து சேதமாக்கப்பட்டன!

## ஊர்காவற்துறையில் சம்பவம்

ஊர்காவற்துறை —

ஊர்காவற்துறை பஸ் நிலையத்துக்கு அண்மையாக இருந்த மினிபஸ் சங்கத்தின் அலுவலகம் மற்றும் தேவாலயம் ஆகியன நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் அடித்து தேசமாக்கப்பட்டன.

தேவாலயத்தில் இருந்த சொரூபமும் அடித்துடைக்கப்பட்டது. கடற்படையினர் மற்றும் பொலிஸ் காவலரண்கள் நிறைந்துள்ள பகுதியில் உள்ள இந்த அலுவலகத்தையும், தேவாலயத்தையும் படையினரைத் தவிர வேறு நபர்கள் தாக்கியிருக்க சாத்தியமில்லை என அந்தப் பகுதி மக்கள் [illegible]தரிவித்தனர்.

குறிப்பிட்ட அலுவலகம் கடற்படையினர், பொலிஸார் மற்றும் இராணுவ துணைக்குழுவான ஈ.பி.டி.பி முகாம்கள் மற்றும் காவலரண்கள் நிறைந்த இடத்தில் இயங்கி வருகின்றமையால் - தற்போதைய குடாநாட்டு நிலைமைகள் காரணமாக அலுவலகப் பணிகள் நேரத்துடன் முடிவடைந்துவிடும். இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு யாரும் செல்வதில்லை.

இந்த நிலையிலேயே விஷமிகள தமது கைவரிசையைக் காட்டியதாக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதல் காரணமாக கிறிஸ்தவ மக்கள் மிகவும் வேதனை அடைந்துள்ளதுடன் இத்தகைய வழி[illegible]ாட்டு இடம் சேத மாக்கப்பட்டமையையிட்டு மிகவும் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற் துறைப் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வெள்ளவாய்க்கால் புனரமைப்புக்கு யுனிசெவ் நிதியுதவி

சுதுமலை —

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வெள்ள வாய்க்கால் புனரமைப்புக்கு யுனிசெப் நிறுவனம் நிதி உதவியை வழங்கியுள்ளதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகிலுள்ள குளத்தில் இருந்து மத்தியூஸ் வீதி ஊடாக சுண்டுக்குழி குளம் வரை செல்லும் வெள்ள வாய்க்காலே புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

மேற்படி நிறுவனத்தால் 15 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும், பெப்ரவரி மாதம் வெள்ளவாய்க்கால் புனரமைப்பு பணிகள் ஆரம்பமாகுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நீண்ட காலமாக வெள்ளவாய்க்கால் [illegible]னரமைக்கப்படாமையால் மழை கால[illegible]ங்களில் நிரம்பி வழியும் கழிவு நீர் வீதியில் தேங்கி நிற்பதால் அந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள் என்புது குறிப் பிடத்தக்கது.

(91)

# 100 மீன்பிடி இறங்குதுறைகளை அமைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு —

நாடளாவிய ரீதியில் 100 மீன்பிடி இறங்குதுறைகளை அமைக்க கடற்றொழில் நீரியல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த இறங்குதுறை அமைப்பதற்கு ஈரான் அரசாங்கமும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் நிதி உதவி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்துக்கு 285 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் சந்திரசிங்க ஜயகிரி தெரிவித்தார்.

கரையோர வளங்கள் முகாமைத்துவ திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள இந்த துறைமுகங்கள் முதல் கட்டமாக 38 இறங்குதுறைகளில் அமைக்கப்படவுள்ளன.

சுனாமியால் 34 மீன்பிடி இறங்குதுறைகள் அழிந்துள்ளதாகவும் இவையும் மீள கட்டியெழுப்பப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வெலிக்கடை சிறையில் விசேட உயர் நீதிமன்றம்

கொழும்பு —

போதைப் பொருளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் விசாரணைக்காக விசேட உயர் நீதிமன்றம் ஒன்று வெலிக்கடைச் சிறைச்சாலையில் திறந்து வைக்கப்படவுள்ளது என நீதி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதற்கமைய வெலிக்கடைச் சிறைச்சாலையில் விடுதலைப்புலி உறுப்பினர் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டவர்களின் விசாரணைக்காக அமைக்கப்பட்ட நீதிமன்றம் தற்போது கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. இந்த நீதிமன்றமே புனரமைக்கப்பட்டு உயர்நீதிமன்றமாக இயங்க[illegible]வுள்ளது.

இந்த நீதிமன்றத்தில் போதைப் பொருட்கள் தவிர்ந்த வேறு சில முக்கிய வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இவ்வாறான நீதிமன்றங்கள் நாட்டில் உள்ள வேறு சிறைச்சாலைகளிலும் அமைப்பதற்கு தாம் திட்டமிட்டுள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை இந்த நீதிமன்றம் சிறைச்சாலை அதிகாரிகள், காவலர்களின் நன்மை கருதியே அமைக்கப்பட்டதாகவும் இது விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

# இந்த வாரம் உங்கள் பலன் எப்படி? 27.01.2006 - 02.02.2006

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| யுரே | 28 இ. 7.31 மகர - சந்<br>30 மா. 6.59 கும்- சந்<br>01மா. 6.53 மீன - சந் | | சனி |
| சூ. புத<br>நெப் | | | |
| சந்<br>சுக் | | குரு | கேது |

### மேடம்

(அஸ்வினி,பரணி,கார்த்திகை1ஆம் கால்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். உறவினர்களாலும் நண்பர்களாலும் உதவி உண்டு. பணவருவாய் சீராக இருக்கும். சிலருக்கு வெளிநாட்டிலிருந்து பொருள் வரவு கிடைக்கலாம். தொடங்கும் கருமங்கள் வெற்றியளிக்கும். தேகசுகம் நன்றாக இருக்கும். மங்கள கருமங்கள் விரைவில் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகப் பணிகள் சீராக நடக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். வருவாய் சிறக்கும். வர்த்தகர்களுக்கு வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். முதலீடுகளால் லாபம் கிட்டும். பணியாட்களும் ஒத்துழைப்பர். தொழிலாளர்களுக்கு தொழில் சிறப்பாக நடைபெறும். வருவாய் பெருகும். மாணவர்கள் முன்னேற்றம் பெறுவர். பெற்றோர், ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவர்.

### இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2)



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். உறவினர்களுடன் கருத்து வேற்றுமை தோன்றும். வருமானத்திலும் பார்க்க, செலவுகள் அதிகரிக்கும். எதிர்பாராத நெருக்கடிகள் தோன்றும். புத்திரர்களால் தொல்லைகள் வந்து சேரும். தேகசுகம் பாதிக்கப்படும். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் இழுபறியைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைக்க மறுப்பர். போக்குவரத்துக்களில் இடையூறுகள் காட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையில் நடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு குன்றும். சிலருக்கு பொருட்சேதம் ஏற்படலாம். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். வருமானமும் குன்றும். நிதி பற்றாக்குறைகாணும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை குறையும்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை,புனர்பூசம் 1,2,3)

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை நன்றாக இருப்பினும் இடையிடையே



பிரச்சினைகள் தோன்றி மறையும். கருமங்களை ஆற்றுவதில் பல இடையூறுகள் தாமதங்கள் ஏற்படும். பணவருவாய் ஓரளவு திருப்திதரும். மங்கள கருமங்கள் தாமதமாகி நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு மேலும் பொறுப்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்களின் உதவி இருப்பதால் சமாளிக்கலாம். அதிகாரிகளுக்கேற்ப நடந்து கொள்வது நன்மைதரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நன்று. வாடிக்கையாளர்களின் வரவு கணிசமான அளவுக்கு முன்னேறும். முதலீடுகள் பிரயாசையின் மேல் விற்பனையாகும். தொழிலாளர்களுக்கு கணிசமான தொழில் வாய்ப்பு உண்டு. ஒப்பந்தங்களை சரிவர நிறைவேற்றுவதில் பிரயாசை அதிகமாகும். மாணவர்கள் கடினமுயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

### கடகம்

(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

கடகராசியினருக்கு குடும்பத்தில் இல்லறம்



நல்லறமாக நடக்கும். எதிர்பாராத பொருள்வரவு ஏற்படலாகும். தொடங்கும் கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். புத்திரர்களால் உதவியும் மகிழ்ச்சியும் உண்டு. வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்க இடம் உண்டு.நண்பர்கள் உறவினர்களின் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். மங்கள கருமங்கள் மனம் போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்குச் செல்வாக்கு அதிகரிக்கும். அதிகாரிகளின் பாராட்டுக்கள் உண்டு. சிலருக்குப் பதவி உயர்வு, வருவாய் என்பன கிட்டும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் நன்கு விற்பனையாகி பணம் சேரும். ஆபரண வியாபாரம் கூடிய நன்மை தரும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுக்கும். புதிய ஒப்பந்தங்களால் அதிக வருமானம் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும்.தொழிற்கல்வி முன்னேற்றம் தரும்.

### சிங்கம்

(மகம்,பூரம், உத்தரம்1)

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப




நிலை நன்றாக இருக்கும். பொருள் வருவாய் திருப்தியாக அமையும். சகோதரர்களாலும் புத்திரர்களாலும் உதவி ஒத்தாசை கிட்டும். தொடங்கும் கருமங்கள் சீராக நிறைவேறும். குடும்பப் பெண்கள் திருப்தியுடன் காணப்படுவர். எடுக்கும் முயற்சிகள் பலிதமடையும். மங்கள கருமங்கள் தாமதமின்றி நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு பிரயாண வசதிகள் சிறப்படையும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். சக ஊழியர்களும் உதவுவார்கள். வியாபாரிகளுக்கு முதலீடுகளால் இலாபம் கிடைக்கும். வங்கி உதவிகள் மூலம் வியாபாரத்தைப் பெருப்பிக்க முடியும். இரும்பு வியாபாரம் கூடிய லாபம் தரும். தொழிலாளர்களுக்கு செய்தொழில் விருத்தியடையும். புதிய தொழில் வாய்ப்புகளும் வந்து சேரும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் காட்டுவர். உயர் கல்வி கற்கும் வாய்ப்புகள் கிடைக்கும்.

### கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)

கன்னிராசியினருக்கு குடும்பத்தில் நிம்மதி



குறையும். குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் தோன்றும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். தொடங்கும் கருமங்கள் கைகூடாது. தேகசுகம் பாதிக்கப்படுவதால், வைத்தியச் செலவு அதிகமாகும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. உறவினர்களாலும் தொல்லைகள் ஏற்படும். மங்கள கருமங்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத் தர்களுக்கு கருமங்களில் சிக்கல்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். பிரயாணங்களில் இடைஞ்சல்கள் தோன்றும். மனநிம்மதி குறையும். வர்த்தகர்கள் கூடியளவு முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. நட்டங்களும் ஏற்படலாம். கடன்களை வசூலிப்பது கடினமான காரியம். தொழிலாளர்கள் எடுத்த ஒப்பந்தங்களை நிறைவு செய்ய முடியாமல் தவிப்பர். வருவாயும் குறையும். மாணவர்கள் விளையாட்டில் நேரத்தைப் போக்குவர். பரீட்சை முடிவுகள் திருப்தி தராது.

### துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)

துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் அதிகம் பிரச்சினைகள் ஏற்



படாது. பொருள் வரவு ஓரளவு திருப்தியாக இருக்கும். க்ருமங்களை ஆற்றுவதில் தாமதங்கள் ஏற்படலாம். தேக சுகத்தைப் பேணிக் கொள்வது நன்று. உறவினர்கள் தக்க தருணத்தில் உதவுவார்கள். விவாகாதி சுபகருமங்கள் தாமதத்தின் மேல் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும் சகஊழியர்களின் உதவியுடன் சமாளிக்கலாம். ஊதிய உயர்வுகள் தாமதமடையும். வியாபாரிகளுக்கு முதலீடுகளால் லாபம் மத்திமமாகவே இருக் கும். கூடுதல் முயற்சி தேவை. ஆடை வியா பாரிகள் கூடுதல் லாபம் பெறுவர். முதலீடுகளைப் பொறுத்துச் செய்வது நன்று. தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். மாணவர்களுக்கு ஊக்கத்துக்கேற்ப முன்னேற்றம் கிட்டும்.

### விருச்சிகம்

(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

விருச்சிக ராசியில் ஜெனனமானவர்களுக்கு குடும்பவாழ்வு நன்றாக அமையும். மன



நிம்மதி நிலவும். புத்திரர்களால் மகிழ்ச்சி கிட்டும். பொருள் வருவாய் அதிகரிக்கும். தொடங்குங் கருமங்கள் எளிதில் நிறைவுபெறும். உறவினர்களின் வரவு மகிழ்ச்சியைக் கொடுக்கும். மங்கள கருமங்கள் எளிதில் நிறைவு பெறும். உறவினர்களின் வரவு மகிழ்ச்சியைக் கொடுக்கும். மங்கள கருமங்கள் விரை வில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பணிகள் சீராக நடக்கும். மேலதிகாரிகளின் உதவியும் கிட்டும். பிரயாணங்கள் இலகுவாக அமையும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனையாகும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். ஏற்றுமதி, இறக்குமதி விருத்தியடையும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில்களால் லாபம் கிடைக்கும். புதிய தொழில் வாய்ப்புகளும் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்நிலை வகிப்பர்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம், 1)

தனுசு ராசிக்காரருக்கு குடும்பநிலை சிறப்



பாக இருக்கும். சுபசந்தோஷமான நிகழ்ச்சிகள் இடம்பெறும். புத்திரர்களால் உதவியும், மகிழ்ச்சியும் கிட்டும். எடுக்கும் முயற்சிகள் தங்கு தடையின்றி நிறைவேறும். பண வருவாய் அதிகரிக்கும். குடும்பப்பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கள கருமங்கள் மனம்போல நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு வரவேற்பு பிரமாதமாக இருக்கும். மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். பதவி உயர்வுகள், வருமான அதிகரிப்புகள் உண்டாகும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் விற்பனையாகி லாபந்தரும். புதிய முதலீடுகளுக்கு நன்று. ஆடம்பரப்பொருட்கள் விற்பனை செய்வோர் கூடுதல் லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்குப் புதிய தொழில் வாய்ப்புகள் கிட்டும். வருமானம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும். பரீட்சைகளில் சித்தி பெறுவர்.

### மகரம்

(உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2)

மகர ராசியினருக்கு குடும்பத்தில் அமைதி குறைவே காணப்படும். அடிக்கடி பிணக்குகள்



தோன்றும். வருவாய்க்கு மிஞ்சிய செலவுகள் இடம் பெறும். தேகசுகம் பாதிக்கப்படுவதால் வைத்தியச் செலவும் அதிகரிக்கும். எண்ணிய கருமங்கள் நடைபெறாது. புத்திரர்களாலும் தொல்லை ஏற்படும். மங்கள கருமங்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்களுக்குப் போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்படலாம். அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக நேரும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். எதிர்பார்த்த லாபம் கிடையாது. வாடிக்கையாளர்களின் வரவு குறையும். தொழிலாளர்களுக்கு ஒப்பந்தங்களில் லாபம் குறையும்.

### கும்பம்

(அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)

கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். கணவன், மனைவி அந்நியோன்யம் சிறப்பாக இருக்கும். பண வருவாய் அதிகரிக்கும். எண்ணிய கருமங்கள் எண்ணியபடி நடக்கும். புத்திரர்களாலும்,




உறவினர்களாலும் உதவியும், வருவாயும் உண்டு. மங்கள கருமங்கள் மனம் போல் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணை கிட்டும். பதவி உயர்வு, வருமான உயர்ச்சி என்பன கிடைக்கும். மக்களின் பாராட்டுகள் உண்டு. முதலீடுகளால் அதிக லாபம் கிடைக்கும். மொத்த வியாபாரம் சிறப்படையும். தொழிலாளர்களின் ஆதரவும் உண்டு. மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி நன்று. ஆசிரியர்களின் பாராட்டுகள் கிடைக்கும்.

### மீனம்

(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)

மீன ராசியினருக்கு குடும்பத்தில் நல்லுறவு நிலவினாலும் இடையிடையே சச்சரவுகள் தோன்றும். புத்திரர்களின் உதவி குறையும்.



குடும்பத்தில் வரவு - செலவு சமமாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவு பெறும். தெய்வ வழிபாடுகள் மனச் சாந்தியைக் கொடுக்கும். மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். எனினும் சக உதவிகளுடன் சமாளிக்கலாம். ஊதிய உயர்வு தாமதமடையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை தேவை. தொழிலாளர்களுக்கு கடின உழைப்பும், முயற்சியும் இருப்பின் வருமானம் கிடைக்கும். வேலைகள் காலதாமதமாகி நிறைவேறும்.

மாணவர்களுக்கு ஊக்கத்துக்கும், முயற்சிக்குமேற்ப சித்தி உண்டு.

# சட்ட விரோதமான மணல் அகழ்வு எப்போது நிறுத்தப்படும்?

கடந்த ஒரு சில வருடங்களாக யாழ்.குடாநாட்டில் சட்ட விரோதமான மணல் அகழ்வுகள் அதிகரித்துக் காணப்படுகிறது. நாளாந்தம் வெளியாகும். பத்திரிகைகளை புரட்டிப் பார்த்தால், மணல் அகழ்வுகள் தொடர்பான செய்திகள் முக்கிய இடம் பிடித்திருக்கும். அதிலும் கூடுதலான சட்டவிரோத மணல் அகழப்படும் பிரதேசமாகத் தென்மராட்சியின் பல்வேறு இடங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் கைதடி, நாவற்குழி, தனங்கிளப்பு, மட்டுவில், கச்சாய், கெற்பேலி, வரணி போன்ற இடங்கள் குறிப்பிடத்தக்கன.

இந்தப் பிரதேசங்களில் காணப்படும் வயல் நிலங்களிலும், வயல்நிலங்களை அண்மித்துள்ள தரவை மேட்டுநிலப் பகுதிகளிலுமேயே இந்த மணல் அகழ்வு அதிகளவாக இடம் பெற்றுவருகிறது. உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றப்படும் மணல் மண் குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து வரும் வாகனங்களில் மணல் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்.குடாநாட்டின் கட்டடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வன்னி, வடமராட்சி பிரதேசங்களில் இருந்து பதிவு செய்யப்பட்ட மணல் விநியோகம் இடம்பெற்று வருகின்ற போதிலும், யாழ்ப்பாணத்தின் மணல் வியாபாரிகளும், சுயதேவைகளுக்கு மணல் தேவைப்படுவோரும் தென்மராட்சிப் பிரதேசத்தின் மணல் மண்ணையே நாடி வருகின்றனர்.

இதற்குப் பிரதான காரணம் இந்தப் பிரதேசங்களில் அகழ்ந்தெடுக்கப்படும் மணல் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதேயாகும். ஒரு உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்றக் கூடியளவு மணல் ஆயிரம் ரூபாவுக்கும் ஒரு லொறியில் ஏற்றக் கூடியளவு மணல் மூவாயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் இந்தப் பிரதேசங்களை நாடி ப் பெருமளவான மணல் வியாபாரிகள் வருகின்றனர்.

நாளாந்தம் சராசரி பத்துக்கும் மேற்பட்ட லொறிகள் இந்தப் பகுதிகளுக்கு வருகை தந்து அதிகளவான மணலை ஏற்றிச் செல்கின்றன.

இவ்வாறு நாளாந்தம் அதிகளவு மணல் ஏற்றப்படுவதால், வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறிவருவதோடு, வயற்கரையோரங்களை அண்டியுள்ள மேட்டு நிலப் பகுதிகளில் காணப்படும் பனை, தென்னை போன்ற மரங்கள் பாறி வீழ்ந்து விடுகின்றன. அது மட்டுமல்லாமல், இந்தப் பிரதேசங்களில் காணப்படும் சிறு வீதிகள் அனைத்தும் அதிகரித்த உழவு இயந்திரப்பாவனை, லொறி பாவனையால் குன்றும்குழியுமாகக் காணப்படுகின்றன. இவற்றை எவரும் கண்டு கொள்வதாக இல்லை.

உண்மையில் நாம் அனைவரும் வெட்கப்பட வேண்டிய விடயம் யாதெனில்- ஒரு பிரதேசத்தில் காணப்படும் உழவு இயந்திர உரிமையாளர்களே தமது பிரதேசங்களிலேயே மணல் அகழ்வில் ஈடுபடுவதுதான்.

தமது பிரதேசங்களின் அரிய வளங்களை இன்னொரு பிரதேச மக்களுக்கு நீண்ட காலப் பயன் கருதாது தாரைவார்ப்பதேயாகும். இன்னொரு விடயம்- இந்தப் பகுதியில் சிறப்பாக சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகிறது.

யாதெனில், தற்போது வயல்நிலங்கள் அனைத்தும் செய்கை பண்ணப்பட்டு விட்டதால், சிலர் வயற்கரையோரங்களை அண்மித்து காணப்படும் மணல் ஒழுங்கைகளில் (சிறுவீதிகள்) உள்ள மண்ணை ஏற்றி வியாபாரம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். "பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்" என்பார்கள். பணத்துக்காக எமது பிரதேசத்தின் அரிய வளங்களை நாமே சீரழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடலாமா? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

கடந்த காலப்பகுதிகளில் சட்ட விரோத மணலை ஏற்றிப் போவதற்காகச் சென்ற உழவு இயந்திரங்கள், லொறிகள் வீதியால் சென்ற பலரை முட்டி மோதிவிட்டுச் சென்றமையும், அதில் பலர் காயமடைந்ததும், மரணமடைந்த சம்பவங்களும் பத்திரிகைகள் ஊடாகவும், நேரடியாகவும் பார்த்து அறிந்த செய்திகளே ஆகும். அது மட்டுமல்லாமல், மணற் தரகர்கள் சிலருக்கு லஞ்சமாக பெரும் தொகை பணத்தைக் கொடுத்து தப்பித்து கொண்ட சம்பவங்களும், மாட்டிக்கொண்ட சம்பவங்களும் என்றுமே மறைக்கப்பட முடி யாதவை.

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி , பலர் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவதாகச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் இனியாவது சமூகத்தின் நலன்கருதி இந்த வேலைகளைக் கைவிட முன்வருவார்களா? அல்லது தொடர்ந்து ஈடுபடுவார்களா?

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மணல் அகழப்படும் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இத்தகைய வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக குரல் கொடுக்க முனைய வேண்டும். அது மட்டுமல்லாது உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடிய கவனமெடுத்து விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது இப்படியே இவர்களை கைவிட்டு விடுவார்களா?

கா.நிமலன் - வரணி

# சந்தனக் கடத்தல் வீரப்பன் சயனைட் கொடுத்தே கொலை!

## அவரது மனைவி திடுக்கிடும் தகவல்

சேலம் —

சந்தனக் கடத்தல் வீரப்பனை விசேட அதிரடிப்படையின் அதிகாரி விஜயகுமார் சுட்டுக் கொன்றார் என்ற செய்தியை மறுத்துள்ள அவரது மனைவி, கிராம மருத்துவர் ஒருவரே சயனைட் விஷம் கொடுத்து கொலை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

வீரப்பனின் மனைவி வெளியிட்டிருக்கும் இந்தத் தகவல் இந்தியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

சந்தனக்கடத்தல் வீரப்பன் கடந்த 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 18 ஆம் திகதி தர்மபுரி - பாப்பிரெட்டிப்பட்டி அருகே அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரோடு அவரது நண்பர்கள் 3 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், முத்துலட்சுமி தனது கணவர் வீரப்பன் அதிரடிப்படையால் சுட்டுக்கொல்லப்படவில்லை. அவருக்கு விஷம் கொடுத்து கொன்று விட்டனர்.

ஆனால், முத்துலட்சுமியின் புகாரை யாரும் கண்டுகொள்ளவில்லை. வீரப்பனைச் சுட்டுக் கொன்ற அதிரடிப்படையின் தலைவராக இருந்த பொலிஸ் அதிகாரி விஜயகுமார், முத்து லட்சுமியின் புகாரை கடுமையாக மறுத்தார்.

வீரப்பனை சுட்டுக் கொன்றோம். இதில் உண்மை எதுவும் மறைக்கப்படவில்லை என்றார். இந்தச் சம்பவம் நடந்து ஒரு வருடம் ஆகிவிட்டது.

இந்த நிலையில்தான் வீரப்பன் சுட்டுக்கொல்லப்படவில்லை. அவரை கிராமத்து மருத்துவரின் உதவியுடன் மோரில் சயனைட் விஷம் கலந்து கொன்றுவிட்டதாக நிரூபிப்பதற்கு முத்துலட்சுமியிடம் 2 ஒளிநாடா ஆதாரங்கள் சிக்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஒளிநாடாவில் வீரப்பனுக்கு சயனைட் கலந்து கெடுத்த கிராமத்து மருத்துவர், முத்துலட்சுமி மற்றும் அவரது உண்மை கண்டறியும் குழுவினரிடம் பேட்டி அளித்தது பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் பேட்டியை அந்த கிராமத்து மருத்துவருக்கே தெரியாமல் முத்து லட்சுமி குழு பதிவுசெய்துள்ளதாம்.

அதே போன்று மேலும் 3 பேரும், முத்துலட்சுமியிடம் உண்மையை கூறும்போது அவர்களுக்கு தெரியாமலே வீடியோ பிடிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு வீரப்பனுக்குக் கொடுக்கப்பட்ட சயனைட் போத்தலும் கிராமத்து மருத்துவர் மூலம் முத்துலட்சுமியிடம் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

2 வீடியோ பதிவு ஆதாரம், சயனைற் போத்தல் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு வீரப்பன் கொல்லப்பட்ட சம்பவத்தில் சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து முத்துலட்சுமியிடம் கேட்டபோது - வீடியோ ஆதாரம், சயனைட் போத்தல் ஆதாரம் உள்ளது. இதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இருப்பதால் அது பற்றி இப்போது பேச விரும்பவில்லை.

விரைவில் அந்த விபரத்தை வெளியிடுவேன் என்று அவர் கூறினார்.

வீரப்பன் விவகாரம் முடிந்து விட்டதாகக் கருதப்பட்ட நிலையில், மீண்டும் அது விஸ்வரூபம் எடுத்திருப்பது திடீர் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டசபைத் தேர்தலில் போட்டியிட தி.மு.க தலைவருக்கு தடைவிதிக்கவும்

## அ.தி.மு.க சட்டத்தரணி முத்துராஜ் மனு

சென்னை —

தமிழக சட்டசபைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ளாத தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு தேர்தலில் போட்டியிடத் தடைவிதிக்குமாறு தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் அ.தி.மு.கவின் சட்டத்தரணி ஒருவர் மனு செய்துள்ளார்.

அ.தி.மு.கவைச் சேர்ந்த சட்டத்தரணி முத்துராஜ் என்பவர் தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தாவிடமும், சபாநாயகர் காளிமுத்துவிடமும் மனு ஒன்றைக் கொடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

சேப்பாக்கம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க தலைவர் கருணாநிதி 60 நாட்களுக்கு ஒரு முறை சட்டசபை வருகைப் பதிவேட்டில் கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு சட்டசபை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து வருகிறார்.

சட்டசபை உறுப்பினர் என்பவரும் அரச ஊழியர்தான். இதுபோல உயர் அதிகாரிகள் வருகைப் பதிவேட்டில் கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு வேலை செய்யாமல் இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

எனவே, சட்டசபையில் கலந்து கொள்ளாத கருணாநிதியை அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தினத்திலிருந்து பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

எம்.எல்.ஏ என்ற முறையில் அவர் பெற்ற சம்பளம் மற்றும் இதர படிகளைத் திரும்பப் பெறவேண்டும். வருங்காலத்தில் அவர் எந்தத் தேர்தலிலும் போட்டியிடத் தடைவிதிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.




# அண்ணா தி.மு.க கூட்டணியில் கார்த்திக் கட்சி இணைகிறது!

சென்னை —

அ.தி.மு.க கூட்டணிக் கட்சிகளுடன் போர்வேர்ட் புளொக் கட்சியும் இணைவதாக அந்தக் கட்சியின் தலைவர் நடிகர் கார்த்திக் அறிவித்துள்ளார்.

இது குறித்து நடிகர் கார்த்திக் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் -

பிளவுபட்ட பல அணித்தலைவர்களைப் போர்வேர்ட் புளொக்கில் சேர்ப்பதே என் நோக்கம். அதற்கான முயற்சியில் ஈடுபடுவேன்.

பல தரப்பு மக்களும் என்னை அறிவார்கள். எனவே தமிழகம் முழுவதும் இந்தக் கட்சியைப் பலப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

பெப்ரவரி முதல் தேர்தல் சுற்றுப் பயணத்தைத் தொடங்கவுள்ளேன். இது சூறாவளிப் பயணமாக இருக்கும்.

போர்வேர்ட் புளொக் கட்சியின் புலிக்கொடியை தமிழகம் முழுவதும் பறக்க விடுவதே என் லட்சியம்.

அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைப்போம். முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்திக்கத் திட்டமிட்டுள்ளேன். விரைவில் அந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

தேர்தலில் எந்தத் தொகுதியில் போட்டியிடுவது என்று இன்னும் முடிவு செய்யவில்லை. முதுகுளத்தூர் உள்ளிட்ட பல தொகுதிகளில் நான் நிற்கவேண்டுமென்று அங்குள்ள மக்கள் விரும்புகின்றனர்.

விவேக், செந்தில், குஷ்பு ஆகியோர் போர்வேர்ட் புளொக்கில் சேருவார்களா? என்று கேட்கிறீர்கள். இவர்கள் மட்டுமின்றி திரையுலகத்தைச் சேர்ந்த மேலும் பலர் எமது கட்சியில் இணைவார்கள்.



விஜயகாந் அரசியலில் ஈடுபட்டது பற்றி நான் கருத்துக்கூற விரும்பவில்லை. தேர்தல் நெருங்கும் போது என் கணிப்பைச் சொல்வேன்.

சுமங்கலி, ஹார்த்வே கேபிள் இணைப்பு நிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்டது வரவேற்கத்தக்கது என கார்த்திக் மேலும் கூறினார்.

# தொகுதிப்பங்கீடு குறித்து வைகோ தீவிர ஆலோசனை


சென்னை —

சட்டசபை உறுப்பினர் விடுதியில் தங்கியிருந்த தனது கட்சியின் அவைத் தலைவர் எல்.கணேசனுடன் வைகோ நேற்றுமுன்தினம் ஒன்றரை மணி நேரம் ஆலோசனை நடத்தினார். கூட்டணி குறித்தும், தொகுதிப் பங்கீடு குறித்தும் இவர்கள் ஆலோசித்ததாகக் கூறப்படுகிறது.


ம.தி.மு.க அவைத்தலைவராகவுள்ள எல்.கணேசன் எப்போதுமே பழைய எம்.எல்.ஏ விடுதியில் 57 ஆவது அறையில் தங்குவார். நேற்று முன்தினமும், அங்கு தங்கியிருந்த அறையில் கணேசனைப் பார்ப்பதற்காக ம.தி. மு.க பொதுச் செயலர் வைகோ காலை 11 மணியளவில் எம்.எல்.ஏசட்டசபை உறுப்பினர் விடுதிக்கு வந்தார்.


மதியம் 12 மணிவரை வைகோவும், எல்.கணேசனும் தீவிர ஆலோசனை நடத்தினர். தி.மு.கவுடனான கூட்டணியில் ம.தி.மு.கவுக்குப் பிரச்சினை இருந்து வருவதாலும், கட்சியினருக்கு இந்தக் கூட்டணியில் நீடிக்க விருப்பமில்லாததாலும் கூட்டணி மாற்றம் குறித்து இவர்கள் விவாதித்ததாகவும் கூறப்படுகிறது. மேலும், தொகுதிப் பங்கீட்டின்போது தாங்கள் எதிர்பார்க்குமளவு தி.மு.க கூட்டணியில் கிடைக்காது என்ற முடிவுக்கு ம.தி.மு.க வந்துள்ளது. இதனால், அ.தி.மு.க கூட்டணியில் இடம்பெற முடியுமா என்பது பற்றிய தீவிர பேச்சு வார்த்தை கடந்த சில நாட்களாக ரகசியமாக நடந்து வருவதாகத் தெரிகிறது.

# இந்திய குடியரசு தின அணிவகுப்பு நிகழ்விலிருந்து...













நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இந்திய உயர் அதிகாரிகளுடன் சொல்ஹெய்ம் இன்று சந்திப்பு!

கொழும்பு—

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைக்கான விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் இன்று புது டெல்கியில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷியாம் சரண் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்த வுள்ளார்.

இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையில் போர் நிறுத்த அமுலாக்கல் தொடர்பான பேச்சுக்களை ஜெனிவாவில் நடத்துவதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்தியதை அடுத்தே அவர் இன்று புதுடெல்கி செல்லவுள்ளார்.

எரிக் சொல்ஹெய்ம் இந்த விஜயத்தின்போது வெளிவிவகாரச் செயலாளர் ஷியாம் சரண் மற்றும் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் நாரயணன் ஆகியோருடன் இலங்கையில் இறுதியாக ஏற்படுத்தப்பட்ட சமரச முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார். அத்துடன் இந்த நகர்வுகள் குறித்து இந்தியாவின் கருத்துக்களையும் அவர் பெற்றுக்கொள்வாரெனத் தெரியவருகிறது.

## சமாதான முயற்சிகளை...

மோசமான சூழ்நிலைகளில் கண்டிப்பாக இது ஒரு திருப்பமே.

இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரு தரப்பினரும் வன்முறைகளையும், படுகொலைகளையும் முடிவுக்குக் கொண்டுவரும் வழிகளை ஏற்படுத்தலாம். அதுவே தீர்வுக்கான முன்னெடுப்பாகவும் அமையும். உண்மையில் அமைதிமுயற்சிகளுக்கு உற்சாகம் அளிக்கக்கூடியது தான். நாம் எந்தத் தரப்பையும் சமரசமாகச் சென்று விடுமாறு கேட்டுக் கொள்ளவில்லை.

இந்த அமைதி முயற்சிகளை சீர்குலைக்க சில தீய சக்திகள் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய அபாயமும் உள்ளது. இருதரப்பினரும் இந்த வன்முறைச்சக்திகளை அனுமதிக்காமல் அமைதிமுயற்சிகளை அவர்கள் தடம்புரளச் செய்யாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் உலகின் மிகப்பெரும் நான்கு மதத்தினரான தமிழ்பேசும் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், புத்த சிங்களவர்கள் என இந்தச் சிறுதீவுக்குள் கணிசமான அளவில் வாழ்ந்து வருகின்றனர். பிரச்சினையை எளிதில் தீர்க்கலாம் ஆனால் நீண்டகாலம் எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(01)

## புலிகளின் பகுதிக்குள்...

துணை ஆயுதக் குழுவினரும் இணைந்து விடுதலைப் புலிகள் பயணம்செய்த உழவு இயந்திரம் மீது ஆர்.பி.ஜி. தாக்குதல் மேற்கொண்டனர். இதன்போது மேஜர் கபிலன் என்ற போராளி வீரச்சாவடைந்ததுடன் மற்றொரு போராளி படுகாயமடைந்தார்.

இதையடுத்து விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில் இருந்து ஊடுருவிய தமது அணியினரை பாதுகாப்பாக மீட்பதற்காக வெலிக்கந்த 231 ஆவது பிரிகேட் இராணுவ முகாமிலிருந்து 5 அங்குல மோட்டார் குண்டுகள் புலிகளின் பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன.

இதேவேளை - படையினரின் தாக்குதலில் காயமுற்ற போராளியையும் வீரச்சாவடைந்த போராளியின் வித்துடலையும் முகாமுக்குக் கொண்டுசென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் மீது கிளைமோர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். எனினும் இதன்போது சேதங்கள் எதுவும் ஏற் படவில்லை.

இந்தத் தாக்குதல் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் விடுதலைப் புலிகள் முறைப்பாடு செய்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் தயா மோகன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை விடு தலைப் புலிகள் கடுமையாகக் கண்டித் துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் -

எரிக் சொல்ஹெய்முடனான சந்திப்பின்போது வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதாக உடன்பட்ட அரசாங்கம் 24 மணிநேரத்துக்குள்ளாகவே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இத்தகைய தாக்குதல்களை மேற்கொண்டு அரசாங்கம் இரட்டை வேடமிட்டுச் செயற்படுகிறது. இராணுவ முகாமிலிருந்து எமது போராளிகள் மீது தாக்குதல் நடத்தப் பட்டபோதும் நல்லெண்ண நடவடிக்கையாக தமது காவலில் இருந்த பொலிஸார் ஒருவரை விடுதலை செய்திருப்பதாக அவர் தெரிவித்தார்

aat விரிவுரைகள் ஆரம்பம்
சகல பிரிவுகளுக்குமான விரிவுரைகள் 04.02.2006 காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றது
யாழ்.மாணவர்களின் நன்மை கருதி aat க்குரிய பதிவுகள் 30.01.2006 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
அலுவலக நேரம் :-
தினமும் 10.00 am - 1.00 pm
மேலதிக விபரங்களுக்கு
(சி-5039)
Career.Com Institute
# 167, 1st Cross Street. Jaffna.
வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில்
T.P 0773039448, 0776155968

## துப்பாக்கிச் சூட்டில் கடற்படைச்சிப்பாய் பலி

கொழும்பு—

வெலிசறை கடற்படை முகாமில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் கடற்படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

எவ்வாறு இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக கடற்படைப்பேச்சாளர் கொமடோர் டி.கே.பி தஸநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொன்ஸ்டபிள்...

நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பில் நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதை ஏற்றுக் கொண்ட தலைவர் பிரபாகரன், ஒரு நல்லெண்ண முயற்சியாக குளியாப்பிட்டியைச் சேர்ந்த கே.ஏ.டொன் சரத் (வயது 39) என்பவரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இதையடுத்து டொன்சரத்தை தமிழீழ நீதிமன்றம் நேற்று விடுதலை செய்து, விடுதலைப் புலிகளின் அரசியற்துறையிடம் கையளித்தது.

விடுதலை செய்யப்பட்ட பொலிஸார் டொன்சரத், விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரால் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வு விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கிளிநொச்சி பிரதிநிதியிடம் கே.ஏ டொன்சரத்தை விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் கையளித்தார்.

தான் விடுதலை செய்யப்பட்ட பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய டொன் சரத் - தம்மோடு கைது செய்யப்பட்ட இருவரையும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுதலை செய்ய வேண்டும் என்று தாழ்மையான வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்தார். விடுதலை செய்யப்பட்ட பொன்சரத் 2 குழந்தைகளின் தந்தையாவார்.

## படையினரின்...

களில் பெருந்தொகையான மக்கள் கூடியிருந்தபோதே, இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றது. இதையடுத்து மக்கள் தலைதெறிக்க ஓடிமறைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, படைச்சிப்பாய் ஒருவர் வைத்திருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாலேயே வயோதிபர் காயமடைந்ததாகப் படையினர் தெரிவித்த னர்.

## மீண்டும்...

நோர்வே அரசாங்கத்தின் முயற்சியால் பெப்ரவரி மத்தியில் இலங்கையில் மீண்டும் அமைதிப் பேச்சுக்கள் தொடங்கவுள்ளன. 2003 ஆம் ஆண்டு ஏப்ரலில் அமைதிப் பேச்சுக்கள் முறிவடைந்த பின்பு நடத்தப்படுகின்ற முதலாவது நேரடிப் பேச்சுக்கள் இவை.

தற்போது மேற்கொள்ளப்படும் விரைவான அமைதி முயற்சிகள் இலங்கையின் வடக்கு - கிழக்கில் அதிகரித்துவரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும். மேலும் யுத்த நிறுத்த ஒப்பந்தமும் முழு அளவில் செயற்படுத்தப்படும்.

இலங்கையில் அமைதித் தீர்வு ஏற்படும் என்ற புதிய நம்பிக்கை அந்த நாட்டு மக்களிடம் ஏற்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

கணனித்துறையில்
எமது தாயக மண்ணில் ஓர்
விடிவெள்ளி
2 ஆம் பக்கம் பார்க்க [C/5037]

## சமாதானப் பேச்சுக்களை...

திரும்பினால் தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று வலியுறுத்தியிருந்தார். மேலும், அரசியல் ஆயுதமாக வன்முறைகளையும், பயங்கரவாதச் செயற்பாடுகளையும் விடுதலைப் புலிகள் மேற்கொள்வதைக் கைவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத் தியிருந்தார்.

அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளான ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, ஜப்பான் ஆகியவை நிரந்தர அமைதி உருவாக பேச்சு மேசைக்கு இரு தரப்பினரும் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தி வந்தன. இலங்கை அமைதி முயற்சிகளில் அமெரிக்கா தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறது.

ஆத்திரமூட்டும் தாக்குதல்கள் நடத்தப்பட்ட போதிலும் பொறுமை காத்திருந்த அரசாங்கத்தை அமெரிக்கா பாராட்டுகிறது. அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் அரசாங்கத்தின் நகர்வுகளுக்கு நாம் ஆதரவளிக்கிறோம்.

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை நாம் ஆதரிக்கிறோம். இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் வன்முறைகளை உடனே முடிவுக்குக் கொண்டுவந்து போர் நிறுத்த ஒப்பந்த சரத்துக்களை முழுமையாகச் செயற்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம்.

பல ஆண்டுகளாக நீடித்து வரும் இனப்பிரச்சினை முடிவுக்கு வருவதைப் பார்க்கவே இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் விரும்புகிறார்கள் என்று நாம் நம்புகின்றோம். அமைதியை உருவாக்கவும் அந்த நாட்டின் நிலைத்தன்மை நீடிக்கவும் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெனீவாவில்...

பேச்சு நடத்தும் இரு தரப்புக்கும் முழுமையான உதவியும் ஒத்துழைப்பும் வழங்கப்படுமென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாணயமாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 101.54 | 102.53 |
| ஸ்ரேலிங் பவுண் | 180.81 | 183.62 |
| யூரோ | 123.93 | 123.93 |
| சுவிஸ் பிராங் | 79.96 | 81.71 |
| அவுஸ்ரேலிய டொலர் | 75.96 | 77.86 |
| ஜப்பானிய யென் | .87 | .89 |

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சின்னராசா சரஸ்வதி

நாச்சிமார்கோயிலடி, தலையாழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னராசா சரஸ்வதி (25-01-2006) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சின்னராசா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கணேஸ், காலஞ்சென்ற கனகசபாபதி, மகேஸ்வரி, மாசிலாமணி (U.K), புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற கணேஸ், காலஞ்சென்ற நாகரத்தினம், பராசக்தி, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மகேசன், காலஞ்சென்ற கமலநாதன், கமலாதேவி (இந்தியா), விஜயலட்சுமி, சத்தியமூர்த்தி (U.K), சண்முகானந்தன், சத்தியசீலன், காலஞ்சென்ற குமரதாஸ், சத்தியலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெகதீஸ்வரி, காந்தகுமார், சிவபாதசுந்தரம், அன்னபூரணி, கலையரசி, சசிகலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,

ஜெகன், குகன், ஜெயந்தன், ஜெனுசா, சிந்துஜன், Dr.பிரகலாதன், பிருந்தாபன், மீராஜினி, திவாகினி, சுபாஜினி, பிரசாந், சாருஜா காலஞ்சென்ற கம்சிகா, அபிநயா, நிருசிகா, மிதுஷா, பிருந்திகா, அர்பிந்தா, ஆரபிகா, ஆர்த்திகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-01-2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மகன் சி.மகேசன்
நியூ ராஜா கிறீம் ஹவுஸ்,
கிங்ஸ் எலைக்ரோனிக் ,
யாழ்ப்பாணம்.

37/8, இராமநாதன் வீதி,
தலையாழி,
யாழ்ப்பாணம்.

(2172)

### திருமதி அன்னப்பிள்ளை சுப்பையா

(காரைநகர்)

காரைநகர் இலகடியைப் பிறப்பிடமாகவும், ஓட்டுமடம் சேச்லேனை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா அன்னப்பிள்ளை (26-01-2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகளும், அமரர் சுப்பையாவின் அன்பு மனைவியும், அமரர்களான செல்லத்துரை, நாகம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், அமரர் இராசம்மா, அமரர் அருணாசலம், நாகேஸ்வரி (கொழும்பு), மகேஸ்வரி (யாழ்ப்பாணம்), அன்னலட்சுமி (கொழும்பு), சிவலிங்கம் (U.K), கனகேஸ்வரி (பிரான்ஸ்), அம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், அமரர் பாக்கியம், அமரர் கந்தையா (விற்பனைத் திணைக்களம்) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (27-01-2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேச் லேன்,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(C/5040)

தகவல் :
க.நடராசா
(பெறாமகன்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.